
www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE FRANCE

# சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளர்ந்துவரும் நிறவாதம்

நோர்வேயில் 'குடிவரவாளர்களுக்கு எதிரான நோர்வேஜியர்கள்' என்ற அமைப்பு இயங்கிவருகிறது. இந்த அமைப்பு பிரபலமான நிற எதிர்ப்பாளரான ஆண மிர்டாலைத் தலைவராகக் கொண்டு இயங்குகிறது. இவர்களது முக்கிய தளங்களில் ஒன்றாக ஞுருமெண்டால் விளங்குகிறது.


அரசியல் தஞ்சம் கோரியும் வேறு விதங்களிலும் நோர்வேயில் வந்து குடியேறியோர்மீது பல வன்முறைகள் ஏவிவிடப்பட இந்த அமைப்பு முக்கிய காரணமாக இருக்கிறது.

பஸ்ஸில் பயணம் செய்வோரைத் தாக்கியும், வெளிநாட்டவர் வசிக்கும் வீடுகளைத் தீயிட்டுக் கொழுத்தியும் இந்த அமைப்பு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

இந்த அமைப்பின் கூட்டம் ஒன்று அண்மையில் ஒஸ்லோவில் நடந்தது. இந்த நிறவெறி அமைப்பிற்கு அதன் கூட்டம் நடக்கும் இடத்திலேயே எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நிற ·வெறி எதிர்ப்பாளர்கள் பத்தாயிரம் பேர் வரையில் திரண்டனர். இது இங்கு நிகழ்ந்த அமைதியான போராட்டங்களில் முக்கியம் வாய்ந்த ஒன்று எனக் கருதலாம்.

ஊர்வலத்தில் நிற எதிர்ப்புக்கு எதிர்ப்பும், இங்கு வரும் வெளிநாட்டவர்கள் அவர்கள் விருப்பப்படி வாழ உத்தரவாதம் வழஙகப்பட வேண்டும் எனவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தக் கூட்டதுக்கு பலத்த பொலிஸ் பாதுாப்பு இடப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு ஆண மிர்டாலும் அவரது சகாக்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே வந்தனர். அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்தபோது நிறவெறி எதிர்ப்பாளர்கள் நிறவாதம் ஒரு வன்செயல் எனக் குரலெழுப்பினர். பின்னர் நிறவாத எதிர்ப்பாளரக்ள் தமது நடுவிரலை உயாத்திமுதுகைக் காட்டியபடி நின்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். 70ஆண்டுகளின் புதிய நாஸிகளின் கோஷமான 'நோர்வே நோர்வே நாட்டவர்க்கே' என்ற கோஷம் ஆரம்பிக்கபபட்தும் எதிர்ப்பாளர்கள் ஒலிபெருக்கிகளை இழுத்தும், மின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைப்புகளைத் துண்டித்தும் வன்முறைகளில் ஈடுபட்டனர். மிர்டால் இந்த நிலையில் தனது உரையைத் தொடரவிடாமல் தடுக்கப்பட்டதால் பொலிசாரின் பாதுகாப்புடன் அவர் அந்த இடத்தை விட்டு அகல நேர்ந்தது.

இந்தச் சம்பவத்தில் ஒஸ்லோவில் பெருந்தொகை மக்கள் கலந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் கிராமப் பகுதிகளில் நிறவாதிகளின் கட்சிப் பிரதிநிதிகள் அண்மைய தேர்தலில் தெரிவாகியுள்ளதும் அவர்களது 'நடவடிக்கைகள்' அதிகரித்து வருகின்றன என்பதும் கசப்பான உண்மையே.

புதிய நாஸிகள் தம்மை ஒரு இனப் போருக்காகத் தயார்செய்து வருகிறார்கள் என்ற உண்மை தற்போது தெரியவந்துள்ளது. இந்தப் புதிய நாஸிகளின் நடவடிக்கைகள் அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவரைத் திருப்பி அனுப்பவேண்டும் என்ற அடிப்படையிலேயே நிகழ்கின்றன. இவர்கள் தற்போது இரகசியமான முறையில் ஆயுதப் பயிற்சி பெறுவதோடு இராணுவ உடையணிந்து நாஸிகளின் சின்னங்களையும் அணிந்து பார்ப்போருக்கு பயம் ஏற்படுத்தும் தோற்றம் தருகின்றனர். இந்த அமைப்பு நோர்வேயில் மட்டுமன்றி டென்மார்க், சுவீடன், ஒஸ்திரியா, ஜேர்மனி போற்ற நாடுகளிலும் உள்ளது. இந்த யுத்தம் கொம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள் போன்றோருக்கும் எதிராக இருந்தாலும் வெளிநாட்டவரே பாரிய ஆபத்தை நோக்குகின்றனர். நாளுக்கு நாள் வளரும் இந்த அமைப்பு நிகழ்த்தும் சிறிய கூட்டங்களில் 20 முதல் 40 பேர்வரை கலந்துகொள்கின்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைசியாக வெளிவந்த புதிய நாஸிகளின் பத்திரிகையில் இரகசியமான பாதுகாப்பிடங்கள், ஆயுத சேகரிப்பு, நிற இன எதிர்ப்புப் போருக்காக பயிற்சி, தலையை மழித்தும் வேறு வித அலங்காரங்கள் செய்தும்காணப்படும் நிறவாத எதிர்ப்புணர்வு கொண்ட அமைப்பினரான 'பிளிட்'சை எப்படி எதிர்கொள்வது போன்ற செய்திகள் உள்ளன.


நோர்வேயில் புதிய நாஸிகளின் தலைமையகம் யோவிக் நகரில் தலைமையைக் கொண்டு இயங்குகிறது.

இங்குள்ள நாங்கள் இந்த நிறவெறி நடவடிக்கைகட்கெதிராக என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொண்டோம்? தனக்கு வரும்வரை அது அவர்களுக்குத்தானே என்ற எமது சிந்தனைகள் இந்த விடயத்திலும் தொடருமா அல்லது எமது இருப்பு தற்காலிகமானதே, பிரச்சனை தீர்ந்ததும் நாட்டிற்குப் போய்விடுவோம் என்றிருக்கப் போகிறோமா? அவ்வாறாயின் எமது நாட்டிற்கான தீர்வுக்கு ஏதாவது முயற்சி செய்கிறோமா? அங்கு சண்டை நடந்தால்தான் இங்கு நாம் வசிக்கலம் என்று நம்பியிருந்த பலருக்கு இங்குள்ள நிலைமைகள் தலைகீழாவது ஓர் அபாய அறிவிப்பு. எமது நாடுதான் எமக்கு என்ற கட்டாயதேவையைத் துரத்துகின்ற நிறவாதமும் 94ல் திறக்கவிருக்கின்ற எல்லைகளும் புறக்கணிக்கப்படுகின்ற 3ம் உலக நாடுகளும் இன்னும் பல நடவடிக்கைகளும் தெளிவுபடுத்தும்.

இன்னும் ஒன்றும் தலைமுழுகிப் போய்விடவில்லை. இனியும் நாம் தேடல்களை ஆரம்பிக்கலாம்.

●

சந்திரா



நோர்வே மொழியில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகையான 'டாக்பிளா(த)' தினசரி ஒரு புதிய பகுதியை ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் நடத்துகிறது. இது சிறுவர் பகுதிதான். இதில் என்ன விசேசம் இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இருக்குது விசயம்!

இந்தச் சிறுவர் பகுதி வழமையான சிறுவர் பகுதிபோல அல்லாமல் 'சிறுவர் சூழலியல் பகுதி' எனப்படுகிறது. சிறுவர்களுக்கு சூழலியல் பற்றிய பிரக்ஞையை வளர்க்கும் விதத்தில் இப்பகுதியில் படைப்புகள் இடம் பிடிக்கின்றன. சூழலியல் தொடர்பான படைப்புகளும், சிறுவர்களின் கதை, கவிதை, குறிப்புகள் போன்றனவும் இடம்பெறுகின்றன. இவ்வாறான ஒரு புதுமை மற்றைய நாடுகளிலோ வேறு மொழிப் பத்திரிகைகளிலோ வருவதாகத் தெரியவில்லை. நான் அறிந்தவரை இதுவே முதல்முயற்சி. உலகைக் காக்கும் பொறுப்பு தற்போதைய சந்ததிக்கு மட்டுமல்ல, எதிர்காலச் சந்ததிக்கும் உண்டு. இதற்குரிய பிரக்ஞையை இப்போதிருந்தே வளர்க்கும் இந்த நடவடிக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

சமாதானி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறீலங்கா அரசின் கைப்பொம்மையாகி தேசிய விடுதலைக்கு எதிராகச் செயற்படத் தூண்டப்பட்ட ஏனைய தமிழ்க் குழு உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர் என அவர்களது உத்தியோகபூர்வ செய்தி தெரிவிக்கிறது. இந்த அழைப்பு மிகக் காலம் கடந்து விடுக்கப்பட்டாலும் உண்மையில் வரவேற்கப்பட வேண்டியதே.

எந்தவொரு தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் அனைத்துத் தேசிய சக்திகளினதும் கூட்டு முன்னணி ஒன்று அவசியமானது. ஆனால் இது பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் நிறுவப்படவேண்டுமேயன்றி சந்தர்ப்பவாதத்துக்காக அமையக்கூடாது. ஆனால் தற்போதைய சூழலில் புலிகள் விடுத்துள்ள இந்த அழைப்பானது பல கேள்விகளை எழுப்புகிறது.

இவ்வாறான ஒரு அழைப்பு புலிகளிடம் இருந்து வருவது இதுவே முதற்தடவையல்ல. முன்பும் சிலதடவைகள் ஏறத்தாழ இதே மாதிரியான அழைப்பு புலிகளிடம் இருந்து வந்துள்ளது. ஆனால் ஏனைய தமிழ்க்குழு உறுப்பினர்கள் இவ்வாறு திரும்பி வந்ததாகத் தெரியவில்லை. புலிகளில் நம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் திரும்ப, அவர்கள் தற்போது ஏற்றுள்ள தலைமைகள் மட்டுமல்ல, புலிகளின் நிறுவன மயமாக்கப்பட்ட ஜனநாயக மறுப்பும், மாற்றுக் கருத்துடையோர் மீதான அச்சுறுத்தல்களும்தான் தடையாக உள்ளன.

தற்போதைய அரசியல், ராணுவச் சூழல் பெரிதும் புலிகளுக்குச் சாதகமான நிலையில் இல்லை. சிங்கள, முஸ்லிம் மக்கள் மீதன படுகொலைகள், விரட்டியடிப்பு, தமிழ் மக்கள் மீது அரசியற் கருத்துத் தடை போன்றன புலிகளைத் தனிமைப்படச் செய்துள்ளது. ராஜீவ் படுகொலைக்குப் பிறகு தமிழகத்திலும் இந்தியாவிலும் தோன்றியுள்ள நெருக்கடிகளும் புலிகளைப் பெரிதும் பதித்துள்ள இந்த வேளை இவவாறு அழைப்பு விடுக்கப்படுவதன் உள்நோக்கம் தனது எதிரிகளைப்பலவீன்பபடுத்துவதாக மட்டும் இருக்கக்கூடாது. உண்மையில் இவ்வாறான அழைப்பு புலிகள் முழுப் பலத்துடனும் இருந்த சமயங்களில் விடப்படுவதே பொருத்தமானது.

புலிகளின் தற்போதைய அழைப்பு உண்மையில் இதயசுத்தியானதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதற்கு முன்னர் ஒரு ஐக்கிய முன்னணி கட்டப்படாமல் போனமைக்கு புலிகளின் நடவடிக்கைகளும் தடையாக இருந்தமையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

புலிகள் இந்த அழைப்பு விடுக்கச் சில வாரங்கள் முன்னதாக தமது மனித உரிமை மறுப்புகளைத் தெளிவாக நடைமுறையில் காட்டியிருந்தனர். தாம் மனித உரிமைகளை மதித்து நடப்அபாம் என ஐ.நா. சபைக்குக் கடிதம் எழுதிய புலிகள்தற்போதும் தமது நடவடிக்கைகளை மாற்றாமல் வைத்துள்ளனர். மககளுடன் வஜழவேண்டும் என்ற உணர்வோடும் உறுதியோடும் தமிழ்த் தேசிய உணர்வோடும் அராஜக எதிர்ப்புணர்வும் கொண்ட கோவிந்தன், செவ்வி போன்றோரின் கடத்தல்கள் நிகழ்ந்துள்ளன. இவர்கள் செய்த குற்றம்பற்றி எதுவித கருத்துக் கூறாமலோ, அல்லது பொய்க குற்றம் சர்ட்டியோ கைதுகள் நிகழ்ந்தன. ஆனால் இந்தக் கைதுகள் பற்றி இவர்களது செய்திகள் அவர்களின் ஊடகங்களிலேயே வரவில்லை.புலிகளால் இலங்கை அரசின் கொடுமைகளை

www.tamilarangam.net

தற்கொலைக்குச் முன்னர் எரித்தவற்றுள் அவை யாவும் அடங்கினவா என்பதும் இன்னும் நிச்சயமாகவில்லை.

இன்று எழுதியிருக்கும் இந்த 23 கவிதைகளில் பத்துக் கவிதைகள் மாத்திரமே இதுவரை பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1986ஆம் ஆண்டு பெண்கள் ஆய்வு வட்டம் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட சொல்லாத சேதிகள் எனும் ஒரு கவிதைத் தொகுப்பில் மூன்று கவிதைகள் பிரசுரமாகின. 1990, 91ஆம் ஆண்டுகளில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரசுரமாகும் சஞ்சிகைகள், சிறுபத்திரிகைகள் ஆகியவற்றில் மீதி ஏழும் வெளியாகின.

இந்த இருபத்துமூன்று கவிதைகளில் பெரும்பாலானவை 85 - 86 காலப் பகுதியில், அவரது 17வது வயதில் எழுதியவையாகும்.

எனினும் சிவரமணி அடிக்கடி எழுதிவந்தார் என்றே எனக்குத் தோன்றுகிறது. சிவரமணியை அறிமுகமான கடந்த ஆறு வருடங்களில் கடைசி இரண்டரை வருடப் பகுதியில் அவர் என்னுடன் மிக நெருக்கமாகப் பழகினார். வெறும் மாணவி - ஆசிரியை உறவாக அது இருக்கவில்லை. மிகுந்த நட்புரிமை கொண்ட, மனம் திறந்த உறவாக அது இருந்தது. எம்மிடையே இருந்த வயது, தலைமுறை வேறுபாட்டைக் கடந்த நெருக்கமாக அது இருந்தது. இந்தக் காலப் பகுதியில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தான் எழுதிய கவிதைகள், சிறுகதைகள் பற்றிப் பல உரையாடல்களின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"வாசிக்கத் தாருங்கள்" என்று கேட்டபோதெல்லாம்,

"இன்னும் கொஞ்சம் திருத்தவேண்டும், திருத்திவிட்டு நீங்களும் ஆறுதலாக இருக்கும்போது தருகிறேன்" என்று கூறுவார்.

யாழ்ப்பாணத்துப் போர்க்கால வாழ்வின் அவலங்களிலும் அவசரங்களிலும் தோய்ந்துபோயிருந்த பொழுதுகளில் விடாமல் கேட்டு வற்புறுத்தி வாங்கிப் படிக்கும் மனோநிலையும் எனக்கு வாய்த்திருக்கவில்லை.

இப்போது உள்ளவை இந்தக் கவிதைகள்.

பெரும்பாலன அவரது கையெழுத்தில்;

அவர் தந்து வைத்தவை;

பார்க்கும்போது அவரது தெற்றுப்பல் சிரிப்பு கண்முன் தெரிவதைத் தவிர்க்க முடியவில்லை.

சிவரமணி கல்விகற்ற யாழ் வேம்படி மகளிர் பாடசாலையின் பழைய சஞ்சிகைகளிற் தேடினால் அவரது வேறு படைப்புகள் கிடைக்கக்கூடும். அவரது குடும்பத்தார், நெருங்கிய நண்பர்கள் ஆகியோரிடம் மேலும் சில இருக்கக்கூடும். தாயாரிடம் கேட்டபோது, பாதி எழுதிய, முடிக்கப்படாத பந்திபோலச் சில உள்ளன என்றார்.

சிவரமணி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் பின்னர் வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்றவர். 1987ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுக்கு அனுமதி பெற்ற அவர், அரசறிவியல், ஆங்கிலம், மொழியியல் ஆகிய பாடங்களைக் கற்றார். பொதுக்கலைமாணி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றமுன்னரே அவரது வாழ்வு முடிந்தது.

மத்தியதரவர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்த சிவரமணியின் பெற்றோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருவருமே ஆசிரியர்கள். தந்தையார் சிவநேசன் அரசியல், இலக்கிய ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக இடதுசாரி அரசியல் சார்பும், அது தொடர்பான முற்போக்கு இலக்கியங்கள்பால் ஆர்வமும் கொண்டவர். சிவரமணியின் அரசியல், கலை இலக்கிய ஈடுபாட்டுக்கு இதுவும் ஒரு உந்துதலாக அமைந்தது.

சிவரமணி இலக்கிய ஆக்கத்தில் மாத்திரமல்ல, ஓவியம், இசை முதலிய கலைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். கோட்டுச் சித்திரங்கள், வர்ண ஓவியங்கள் சில வரைந்திருந்தார். ஆனால் தனக்கு மிக நெருங்கியவர்கள் தவிர வேறு எவருக்கும் இதனை அவர் வெளிப்படுத்தவில்லை. வீணையும் கற்றுவந்தார். சிறுசிறு கலை, கைப்பணிப் பொருட்கள் சேகரிப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது.

சிவரமணி எழுத ஆரம்பித்த காலம் மிக முக்கியமானதாகும். குறிப்பாகவே, கடந்த பத்தாண்டுகள் இலங்கைவாழ் தமிழர் வாழ்வு பல்வேறு நெருக்கடிகளையும், முரண்பாடுகளையும், கருத்துகளையும், அனுபவங்களையும் சந்தித்த காலமாகும். தேசியவாத அரசியலின் முற்போக்கானதும், பிற்போக்கானதுமான கருத்தோட்டங்கள் கலந்து நிகழ்ந்த இக்காலப் பகுதி தமிழர் வாழ்வுக்கும் அதன் பிரச்சனைகளுக்கும் அலாதியான ஒரு தன்மையை அளித்தன. இந்தப் பின்னணியில் பல்வேறு கலாசார, சமூக இயக்கங்கள் நிகழ்ந்தன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கிடையே புதிய உற்சாகமும் விழிப்பும் ஏற்பட்டதை எண்பதாம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே அவதானிக்கலாம். இந்த உற்சாகம் வெவ்வேறு பெண்கள் அமைப்புகளின் தோற்றத்திலும், அவர்களது அரசியல் ஈடுபாட்டிலும், கலை இலக்கிய நிகழ்ச்சிகளிலும் வெளிப்பட்டது.

இக்காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இயக்கத்தின்பால் மாணவர்களும் இளைஞர்களும் அதிகளவாக ஈர்க்கப்படத் தொடங்கியபோது, கணிசமான பெண்களும் இதில் இடம்பெற்றனர். தேசியக் குழுக்களது அங்கத்தவர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இவர்கள் செயற்பட்டனர். தேசியவாதக் குழுக்களும் தமது பெண்கள் அணிகளை அமைக்கத் தொடங்கின. ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, தமிழ்ப் பெண்கள் விடுதலைக் கழகம், சுதந்திரப் பறவைகள் என இவை அமைந்தன. ஆயுதப் பயிற்சி பெறுவதிலும் இராணுவ நடவடிக்கைகளிலும் பெண்களும் பங்குகொண்டனர்.

இவை தவிர அரசியற் குழுக்களைச் சாராத சுயாதீனமான சில பெண்கள் குழுக்களும் இக் காலகட்டத்தில் செயற்பட்டன. அன்னையர் முன்னணி, (1984 - '87) யாழ் பல்கலைக்கழக பெண்கள் முற்போக்குச் சங்கம் (1980 - '82), பெண்கள் ஆய்வு வட்டம், மாதர் மறுமலர்ச்சிப் பேரணி, தீவக மாதர் அணி, பூரணி பெண்கள் நிலையம்,

இந்த இதழின் காலதாமதத்துக்கும் இதில் இடம்பெற்ற எழுத்துப் பிழைகளுக்கும் கணனியின் தவிர்க்கமுடியாத தொழில்நுட்பக் கோளாறு காரணமாயமைந்தது. மன்னிக்க வேண்டுகிறோம்

சுவடுகள்

www.tamilarangam.net

யாழ் பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம் ஆகியன முக்கியமானவையாகும். (இவற்றில் பெண்கள் ஆய்வு வட்டம், பூரணி, யாழ் பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம் ஆகியவற்றில் சிவரமணி இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்)

பெண்கள் சஞ்சிகைகள் பல இக்காலத்தில் வெளிவந்தன. பெண்விடுதலை, தாகம், தோழி, விளக்கு, செந்தழல், சுதந்திரப் பறவைகள், நங்கை ஆகிய இவற்றில் பெண்களது ஆக்கங்கள் – கவிதையிலிருந்து கட்டுரை வரை இடம்பெற்றன. இவைதவிர சொல்லாத சேதிகள் எனும் பெண்களின் கவிதைத் தொகுதி ஒன்றும் வெளியானது. வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஒரு புத்தார்வமும், உற்சாகமும் வெளிப்பட்டது. கொழும்பிலிருந்து வெளிவந்த பெண்ணின் குரல் சஞ்சிகையின் அதிகளவான பிரதிகள் யாழ்ப்பாணப் பெண்களிடையே விற்பனையானது இதற்கு ஒரு உதாரணமாகும்.



இக்காலகட்டத்தில் புதிதாகப் பல இளம்பெண்கள் கலை இலக்கியப் பரப்பில் காலடி வைத்தனர். ஊர்வசி, செல்வி, அவ்வை, மைத்திரேயி, மைதிலி அருளையா, சங்கரி, ராதா, ரங்கா, நளாயினி கணபதிப்பிள்ளை, ஊரெழு தர்ஷினி, வசந்தி அம்மன்கிளி, மசூறா மஜீட் எனப் பலர் எழுதத் தொடங்கினர். இவர்களில் முக்கியமாகச் சிறந்த கவிஞர்களாக வளரக்கூடிய தீர்மானமான அடையாளங்களை வெளிக்காட்டியவர்கள் சிவரமணியும் ஊர்வசியும் ஆவர்.

இலக்கியத்தில் மாத்திரமன்றி பெண்கள் அதிகம் கைவைக்காத, அல்லது ஈடுபாடு கொள்வர் என எதிர்பார்க்கப்படாத நவீன ஓவியத் துறையிலும் சிலர் பிரவேசித்தனர். 1986ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக கலாசாரக் குழு நடத்திய மூன்று இளம் பெண்களது ஓவியக் கண்காட்சி இதற்குச் சான்றானது.

பெண்களது இந்தக் கலை இலக்கிய வெளிப்பாடுகள் சமகாலத் தமிழ்க் கலை இலக்கியத்தில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்தன; அதன் பொருட்பரப்பை விசாலித்தன.

தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நிலை, அவர்களது வெவ்வேறான பிரச்சனைகள், பெண் விடுதலை, பெண்நிலை வாதம் ஆகியன குறித்து எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து பெண்களிடையேயும், இளைஞரிடையேயும் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்கள், வாதப் பிரதிவாதங்கள் பெண்களது கலை இலக்கிய முயற்சிகளிலும் பிரதிபலித்தன. பெண்விடுதலை, பெண்நிலைவாதம் தொடர்பான கருத்துப் பரிமாறல்களுக்குத் தமிழ்த் தேசியவாதப் பின்னணி ஒரு ஏற்புடைமையை அளித்திருந்தது.

www.tamilarangam.net

பெண்களது ஆக்கங்கள் மாத்திரமல்லாது பொதுவாகவே இக்காலத்தில் நிகழ்ந்த கலை இலக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றின் மையப் பொருட்களில் 'பெண்கள் பிரச்சனை'யும் ஒன்றாக இருந்தது. குறிப்பாக இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பிரபலமான பல நாடகங்கள் பெண்கள் பற்றிப் பேசின. மண்சுமந்த மேனியர், தியாகத் திருமணம், சரிபாதி, மாதொருபாகன், தாயுமாய் நாயுமானார், சக்தி பிறக்குது ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும்.

இத்தகையதோர் பின்னணியில்தான் சிவரமணியும் எழுத ஆரம்பித்திருந்தார்.

மேற்கூறியவை மாத்திரமல்ல; சமூக அமைப்பு, கலாசாரம் பற்றிய வினாக்களும் தர்க்கங்களும் இளைஞர் மத்தியில் இடம்பெற்றிருந்தன. பெண்களது விழிப்புணர்வு, பெண்விடுதலைக் கருத்துகள் ஆகியவை காரணமாகத் தவிர்க்க முடியாதபடி, வாழ்வின் சகல அம்சங்கள் பற்றியும் மபரிசீலனை, கருத்துப் பரிமாறல்கள் ஆகியவை சிறியளவிலாவது காணப்பட்டன. திருமணம், குடும்பம், ஆண் பெண் உறவு, காதல், கற்பு முதலியன பற்றிப் பல வினாக்கள் எழுந்தன. இவற்றுடன் இலக்கியம், கலையாக்கம், அரசியல், கட்சி, தலைமையும் தொண்டர்களும் போன்றவை பற்றிய கருத்துத் தேடல்களும் இடம்பெற்றன.

மொத்தத்தில் இக்காலத்தில் திறந்த மனதுடன் தம்மைச் சுற்றி நிகழ்பவற்றை அவதானிக்கும் உணர்திறன் மிக்க இளந்தலைமுறையினருக்கு அவர்களது புத்தியை விசாலிக்கக்கூடிய, உலகப் பார்வையை ஆழமாக்கவல்ல பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்தன.

இக்காலத்தில்தான் சிவரமணி வளர்ந்துகொண்டிருந்தார்; எழுதத் தொடங்கியிருந்தார்.

1985ஆம் ஆண்டிலிருந்து, பெண்கள் ஆய்வு வட்டத்தின் அங்கத்தவராக இணைந்த சிவரமணி பல கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளில் மிக ஆர்வத்துடன் பங்குபற்றினார். கவிதாநிகழ்வு போன்ற கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டார். கலந்துரையாடல்களின் போது அவர் வெளிப்படுத்திய உற்சாகத்தையும், கூர்மையான உணர்திறனையும் தன்னைச் சுற்றியுள்ள விடயங்கள் பற்றிய காத்திரமான விமர்சனத்தினையும் கண்டு வியப்புற்றிருக்கிறேன். மிக இளம் வயதிலேயே உலக நடப்புகளை அறிந்து புரிந்துகொள்ள விரும்புகிற ஆர்வத்தையும், அவரது பல்துறை வாசிப்பு நாட்டத்தையும் கண்டு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்திருக்கிறேன். தமிழ்ப் பெண்களிடையே வளர்கின்ற விழிப்புணர்வினதும், விடுதலை ஆர்வத்தினதும், தற்துணிவினதும் ஒரு தனியாள் அடையாளமாக அவர் தென்பட்டார்.

(அடுத்த இதழில் வரும்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## முதன்முதலாக நோர்வேயில் உயர் தொழில் நுட்பத்துடன் வீடியோ படப்பிடிப்பு செய்பவர்கள்

## திருமண வைபவங்களா?

## பிறந்தநாள் விழாக்களா?

## பொது வைபவங்களா?


## கலை நிகழ்ச்சிகளா?

*வாழ்வில் ஒருதடவை மட்டுமேவரும் எந்த நிகழ்ச்சியையும், அதே வண்ணம் மாறாமல் வாழ்வு முழுவதும் கண்டுகளித்திட சிறந்த ஒளிப்பதிவுடன் கூடிய வீடியோ படங்களைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்.*

*தொலைபேசி: 02/570456, 02/571287*

## உயர்ந்த தொழில் நுட்பத்துக்கும் தரத்துக்கும் உத்தரவாதம் வழங்கும் படப்பிடிப்பாளர்கள்

INDER VIDEO MOVIES
Lakke Gt 75, Oppg 1
0562 Oslo 5




**தொடர்புகள்:** K.SHAN & THAYA

Phone 02/570456
02/571287

www.tamilarangam.net

# பிளவுபடும் தென்னாசியா

- தங்கம் -

கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் நிகழவிருந்த தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பிற்கான 'சார்க்' உச்சி மாநாடு இந்தியாவின் ஒத்துழைப்பின்மையால் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது. பல்வேறு அரசியல் போக்குகளைக் கொண்டுள்ள இந்தப் பிராந்திய நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய ஏழு நாடுகளால் ஆறு வருடங்கள் முன்னதாக தொடங்கப்பட்ட இந்த அமைப்பு தொடங்கிய நாளில் இருந்தே இழுபறி நிலையில் இருந்து வருகிறது. இதன் உச்சக் கட்டமாக கொழும்பு மாநாடு ரத்துச் செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

உலகின் மொத்த சனத்தொகையில் சுமார் 20%ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தப் பிராநிதிஷம் சர்வதேச ரீதியில் முக்கியம் பெறாமல் போனமைக்குக் காரணம் பிராந்திய நாடுகள் அனைத்தும் ஏதோ ஒரு ஏகாதிபத்தியத்தின் அல்லது முதலாளித்துவ நாட்டின் பக்கம் சார்ந்து அவற்றில் பெருமளவு தங்கியிருப்பதே எனலாம்.

பிரித்தானிய ஏகாதிப்பததியம் இந்தப் பிராந்தியத்தில் இருந்து தனது நேரடி ஆட்சியை விலக்கிக் கொண்டபிறகு இன்றுவரை இந்தப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றுவரும் இந்தியாவிற்கும் ஏகாதிப்திதிய சுரண்டல்வாதிகளின் வளர்ப்புப் பிராணிகளாக இருந்துவரும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே முரண்பாடுகள் காலத்திற்குக் காலம் மோசமடைந்து வருவது சாதாரண விடயம். (தற்போது இந்தப் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்தது வேறு விடயம்)

## இந்திய பாகிஸ்தான் முரண்பாடு

இந்திய பாகிஸ்தான் நெருக்கடி வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவு கொந்தளித்துப் போயுள்ளது. பாகிஸ்தான் ஆதரவு பெற்ற காஷ்மீர், பஞ்சாப் விடுதலைப் போராட்டங்களும் அவற்றின் வன்முறை வெளிப்பாடுகளும், இந்தியாவில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் முஸ்லீம் மக்கள் மீதான வெறித் தாக்குதல்களுக்குப் பின்னால் ஆர்.எஸ்.எஸ், விஷ்வ இந்து பரிஷத், பி.ஜே.பி போன்றன உறுதியாக நிற்பதும்பாகிஸ்தான் இந்திய உறவைக் கடுமையாகப் பாதித்துள்ளன. இதன் பிரதிபலிப்பாகவே இந்தியாவிற்கு விஜயம் செய்யவிருந்த பாகிஸ்தான் கிறிக்கெட் குழு தாக்கப்படும் என்று விஷ்வ இந்து பரிஷத் அமைப்பு பகிரங்கமாக அறிவத்ததும் கிறிக்கெட் குழுவின் விஜயம் இரத்தானதும் கொள்ளப்படலாம். இரு நாடுகளின் உறவும் முன்னெப்போதும் இல்லாத அளவு விளையாட்டுத் துறையை நேரடியாகப் பாதிக்கும் அளவுக்கு மோசமடைந்துள்ளது.

## இலங்கை இந்திய உறவு

இந்த இரு நாடுகளின் உறவு கடந்த 40 வருடங்களாக சிறிதுசிறிதாக மோசமாகி வந்தபோதும் 80களின் ஆரம்பத்திலேயே இரு நாடுகளும் தமது இடைவெளியை அதிமாக்கிக் கொண்ட காலமாகும். இதைத் தொடர்ந்து இலங்கை இந்திய உடன்படிக்கையும், அதையடுத்து இந்தியப் படைகளின் வருகையும் ஒன்றே உறவில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போதைய ஜனாதிபதியான பிரேமாவின் வருகையையடுத்து மீண்டும் உறவு பிளவாக மாறத் தொடங்கியது. 1978ல் 'ஆசியான்' அமைப்பில் இந்தயாவின் விரோத்தையும் பொருட்படுத்தாது அங்கத்துவம் பெற இலங்கையின் சார்பில் அப்போதைய பிரதமர் பிரேமதாசா முயன்றது முதல் இந்தியப் படைகளை அரசியல் பலவந்தம் மூலம் வெளியேற்றியது வரைபிரேமதாசா இந்திய நலன்களுக்கு விரோதமாகச் செல்லும் போக்கையே கடைப்பிடித்து வருகிறார். அண்மைய மாநாடு ரத்துச் செய்யப்பட்டமைக்கு இந்திய உளவு ஸ்தாபனம் 'றோ'வின் செயல்பாடுகள் காரணம் என்ற குற்றச்சாட்டு பரவலாக இலங்கையிலும் இந்தியாவிலும் கூறப்படுகிறது. அமைச்சர் தொண்டமான் சபாநாயகர் முகம்மது ஆகியோர் இந்தியப் பிரதமரை சந்தித்துப் பேசியபோது மாநாட்டில் பங்கொள்வதை அவர் உறுதிப்படுத்தினார் எனவும், எனினும் இந்தியப் பிரமர் கொழும்பில் வைத்துத் தாக்கப்படுவாரென்றும், பூட்டான் மன்னர் நாட்டில் இல்லாதபோது அவரைக் கவிழ்க்க சதி மேற்கொள்ளப்பட் உள்ளதாகவும் றோ ரகசிய அறிக்கை சமர்ப்பித்ததாலேயே இருவரும் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை எனவும்கூறப்படுகிறது. தென்னாசியப் பிராந்தியத்தின் தலைமையை இலங்கை ஜனாதிபதி ஏற்பதை இந்தியா விரும்பாமையே இந்த மாநாட்டை றோ திட்டமிட்டுக் குழப்பியமைக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

இந்திய அமைதிப் படைகளை எதிர்த்துப் போட்டியிட்ட, அப்போது நலிவுற்றிருந்த புலிகளுக்கு இலங்கை ஆயுதம் வழங்கியமையும் இந்தியப் படைவீரன் ஒருவனாவது இலங்கையில் இருக்கும்வரை சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்தமறுத்து மாலைதீவில் மாநாடு நிகழ்ந்த போது தான்செல்லாமல் தனது




பிரதமரை அனுப்பியமை இலங்கை இந்திய உடன்பாட்டிற்கு முரணாக சிலாபத்துறையில் அமெரிக்க செய்தி நிறுவனம் 'Voice of America'விற்கு சுயமாக இயங்க அனுமதியளித்தமை, கடைசியில் தனது தவறிற்கு மன்னிப்புக் கேட்டபின்பும் இந்தய செய்தியாளர் கருப்புசாமியை பவவந்தமாக வெளியேற்றியமை என்பனஇந்தியா இந்த மாநாட்டைக் குழப்ப முக்கிய காரணங்கள் எனலாம். எனினும் திட்டமிட்டபடியே பாகிஸ்தான் பிரதமரும் தற்போதைய சார்க் மாநாட்டுத் தலைவராகிய மாலைதீவு ஜனாதிபதியும் மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு வந்ததோடு இந்தியா தொடர்பாக வெளியிட்ட அதிருப்தியும் இந்தியாவைச் சினம்கொள்ள வைத்துள்ளன. தவிரவும் இவர்களுக்கு இலங்கை ஜனாதிபத அளித்த இரவு விருந்தில் பாகிஸ்தான் பிரதமர் காஷ்மீர் பிரச்சனை பற்றிக் குறிப்பிட்டமையும் இந்திய வெளிவிவகார அதிகாரிகளுக்கு ஆத்திரம் தரக்கூடிய செயல்கள் என்பது உண்மையே.


உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியில் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்தியாவிற்கு அயல்நாடுகளுடனான கசப்பான உறவு

www.tamilarangam.net

பாரதுாரமான விசயமே. கொழும்பில் நிகழவேண்டிய மாநாடு தொடர்பாக இந்தியா நடந்துககாண்ட விதம் பற்றி இந்தியாவின் முன்னணிப் பத்திரிகைகள் இரண்டான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'புறொண்ட லைன் என்பன வெளியிட்ட கருத்துகளில் இந்தியாவைத் தனிமைப்படுத்துவதிலும், பிராநிதியத்தில் இந்தியாவிற்கு எதிரான தனிமைப்படுத்துவதிலும், இந்தியாவுக்கு எதிராக செயற்படுவதிலும் அயல்நாடுகள் வெற்றி கொண்டுள்ளன என்று குறிபிபட்டுள்ளன.

அண்மைக் காலமாக இப்பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கத்துக்கு எதிராக செயற்பட்டுவரும்நாடுகளின் பலம் சற்று ஓங்கியுள்ளது. 1975இல் சிக்கிம் இற்கு நடந்த கதி தனக்கும் நடக்கலாம் என்ற பயத்தில் பூட்டான் இருக்கின்றபோதும் அங்கு கிளர்ச்சியாளர்களின் கை வருவதுடன், நேபாளத்திலும் இந்தியாவுக்கு எதிரான கருத்துப் போக்குகள் வளர்ந்து வருகின்றன. இந்த நிலையில் மீண்டும் இந்த உச்சிமாநாட்டைக் கொழும்பில் நடத்த இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளதுடன் அரசியல் நிர்ப்பந்தம் மூலம் இந்தியாவை மாநாட்டில் பங்குபற்றவைக்க முயல்கிறது. அண்மையில் திட்டமிடப்பட்டிருந்த உச்சி மாநாட்டுக்கு முன்னர் காமினி, லலித் மூலம் பிரேமாவைப் பதவிவிலத்த இந்தியாவின் றோ முயன்றதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான ஒரு முயற்சியில் மீண்டும் றோ ஈடுபடாது என்பதற்கு எந்தவித உத்தரவாதம் இல்லை.

பிராநிதியத்தில் உள்ள சகல நாடுகளும் தத்தம் நாடுகளில் உள்ள சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அந்த மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுகண்டு அயல்நாடுகளுடன் உண்மையான புரிந்துணர்வை வளர்த்தெடுக்க முயலாவிடில் தென்னாசிய அரசியல் பொருளாதார ஒத்துழைப்பு வெறும் காகிதங்களிலும், மாநாடுகளிலும் மட்டுமே பேசப்படும் ஒரு சங்கதியாகிவிடும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குவைத் போல் மீட்டுத் தருவார்களா?

கடந்த வருடம் வளைகுடாப் பிரச்சனை தொடங்கியவுடன் பலஸ்தீனர்களின் பிரச்சனையும் உச்சம் பெற்றது.


இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் உருவான இஸ்ரேலிய நாடும் அதைத் தொடர்ந்து பலஸ்தீனர்கள் காலம்காலமாக அனுபவித்த கொடுமைகளும் எல்லோரும் அறிந்தவைதான்.

இதுவரை எல்லாவற்றையும் கண்டும் காணாதிருந்த மேற்கும், அமெரிக்காவும் வளைகுடாப் பிரச்சனையைத் தொடர்ந்து இன்று தவிர்க்க முடியாத நிலையில் பலஸ்தீனப் பிரச்சனைக்கு முக்கியம் கொடுக்கின்றன.

1975ம் ஆண்டு ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையான யூத தேசியவாதமும் சியோனிசமும் ஒருவகை இன ஒதுக்கல் கொள்கை என்பதாகும். இதற்கு ஆதரவாக 72 நாடுகளும், எதிராக 35 நாடுகளும் வாக்களித்தன. 32 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இன்று இப்பிரேரணை வளைகுடா யுத்தத்தின் பின் முக்கியம் பெறுகிறது. (வல்லரசுகள் முக்கியம் கொடுக்கின்றன) இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் முன்னர் இந்தப் பிரேரணையை கடுமையாக எதிர்த்த அமெரிக்கா இன்று இது தொடர்பாக கொண்டுள்ள அக்கறைதான்.

இஸ்ரேல் அரபு யுத்தத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அரபு நாடுகள் ஐ.நா. சபையின்




*(Tegning av Mahmud Kahil, MEI)*

www.tamilarangam.net

விதிமுறைப்படி இஸ்ரேலின் ஐ.நா அங்கத்துவத்தை இல்லாதொழிக்க முயற்சித்தன.

சியோனிசத்துக்கு எதிரான இந்தப் பிரேரணையை இஸ்ரேல் அரசு 'யூதருக்கும், இஸ்ரேலுக்கும் எதிரான பிரேரணை இது' என வர்ணித்ததுடன் தனது மக்களுக்கு 'யூதர்கள் தமது நாட்டில் வாழும் உரிமையை மறுக்கும் பிரேரணை இது எனத் தமது நாட்டு மக்களிடையே பிரச்சாரம் செய்தது.

இன்று வல்லரசு நாடுகள் பாலஸ்தீனப் பிரச்சனையைத் தீர்ப்பதில் காட்டும் அக்கறையை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இதன் பின்னணியில் வளைகுடாப் போரில்





அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து ஈராக்கைத் தாக்குவதில் அரபு நாடுகள் பல அமெரிக்காவுடன் கைகோர்த்து இறங்கின. இன்று, இஸ்ரேலைக் காரணமாகக் காட்டி அமெரிக்காவுடன் முரண்பட்ட பல அரபு நாடுகளின் புதிய நட்பையும், முன்னரே, நட்புடன் இருந்த அரபுநாடுகளின் நெருங்கிய நட்பையும் (இலாபங்களை) இழக்க அமெரிக்கா விரும்பவில்லை.

ஏகபோக முடிசூடும் இத்தகைய நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாதிருப்பதற்கே இன்று இதை அமெரிக்கா லாகவமாகக் கையாளுகின்றது. இதற்காக இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்த ரஷ்ய யூதர்களுக்கான புதிய வீடமைப்புப் பொருளாதார உதவியை தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்துவதன் மூலம் அரபு நெஞ்சங்களில் இடம்பிடிக்க ஜோர்ஜ் புஷ் முயல்கிறார். இஸ்ரேலோ இதற்கு எதிர் முனையில் நின்றபடி தான் எதற்கும் இணங்க முடியாது என அடம்பிடிக்கிறது. குவைத் ஆக்கிரமிப்பின்போது பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத் ஈராக்கை ஆதரித்ததைக் காரணம் காட்டி அரபு சமாதானப் பேச்சுகளில் இருந்து அவ்வமைப்பை ஒதுக்கிவிட முயற்சிகள் நடக்கின்றன.,

ஆனால் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்து ஆறு மாதங்களுக்குள் குவைத்தை மீட்டுக் கொடுத்த மேற்கும் அமெரிக்காவும் ஏன் பல வருடங்களாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள்ளான பாலஸ்தீனத்தையும் மீட்டுக் கொடுக்க முடியாமல் உள்ளது என அரபு மக்கள் பலத்த கேள்வி எழுப்புகின்றனர்.

●

தேவதாஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தப்பிப் பிழைத்த பிரேமதாசா

தேசபக்தன்.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக ஆளும் கட்சியினர் கொண்டுவந்த 'நம்பிக்கை இல்லாப் பிரேரணை' விஸ்வரூபம் எடுத்த பிரச்சனை. ஆளும் கட்சியும், பல எதிரணியினரும் கூட்டாக இந்த நடவடிக்கையில் இறங்கினர். ஆயினும் கோடி கோடியாக லஞ்சப் பணம் மிரட்டல் எனப் 'பூந்து விளையாடிய' பிரேமதாசா இந்தப் பிரேரணையைக் காற்றுப்போக வைத்துள்ளார். பிரேரணை கொண்டு வருவதற்கான எம்.பி.மாரின் கையெழுத்துகள் போலியானவை எனக் கூறி இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்படாமல் போனது. ஆனால் இந்தப் பிரேரணை தயாரிப்பதில் ஆரம்பத்தில் முன்னணியில் நின்று செயல்பட்டவர் சபாநாயகரே என்றும் (தனது மகனுக்கு மேயர் பதவி தரப்படவில்லை என்பதற்காகவே இதை அவர் செய்தததாகக் கூறப்படுகிறது) அவரின் முன்னிலையிலேயே தாம் கையொப்பம் இட்டதாகவும், இவை எப்படிப் போலியானவை என்றும் போலியானவற்றைக் காட்டும்படியும் எதிரணியினர் கூறிவருகின்றனர்.



தொண்டமானின் தூதின் பின்னர் சபாநாயகர் 'பல்ட்டி' அடித்ததாகவும் கூறப்படுகிறது. (பத்துக் கோடி ரூபாய் சட்டைப் பைக்குள் திணிக்கப்பட்டது என்றும் ஒரு தகவல்)

பின்னர் பிரேமதாசவுக்கு எதிரான பிரேரணை கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல சபாநாயகருக்கு எதிரான பிரேரணையாகி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 85வாக்குகளும் (சபாநாயகரை எதிர்த்து) பிரேரணைக்கு எதிராக 123 வாக்குகளும் பெற்று பிரேரணை தோல்வியடைந்தது.

சபாநாயகரை எதிர்த்து சுதந்திரக் கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியில் சிலர் (ஈபிஆர்எல்எஃப்) மற்றும் ஆளும் கட்சி அதிருப்தியாளர்கள் வாக்களித்தனர்.

சபாநாயகருக்குச் சார்பாக வாக்களித்த கட்சிகள் ஐ.தே.க. முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணியினர், ஈரோசினர், ஈஎன்டிஎல்எஃப்பினர் ஆகியோர்.

இதில் பல தமிழ்க் குழுக்கள் இன்னும் அரசுக்கு முண்டு கொடுத்து வருகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ், வாதத்தின்போது சபாநாயகரே பிரேரணையைத் தயாரித்தவர் எனக் குற்றம் சாட்டிவிட்டு, வாக்கெடுப்பில் அவர் பக்கம் நின்று தனது இரட்டைத் தனத்தைத் தோலுரித்துக் காட்டியது.

சமரசவாதி தொண்டமானோ 'சபாநாயகரின்' தாராளபோக்கை எதிர்க் கட்சியினர் அனுகூலமாகப் பயன்படுத்த முனைந்துவிட்டனர் என ஒப்பாரி வைத்துள்ளார் ●

www.tamilarangam.net

உருக்குலைந்து கிடக்கும் கிளுவை வேலிக்குள் பிரிந்து காற்றில் கிளம்பிப் பறக்கும் தென்னோலைக் கூரையைச் சுமந்தபடி, அலைகள் ஏறி விளையாடும் மணல் மேட்டை அண்டி, கடலையே வெறித்துக் காத்துக் காய்ந்து கிடக்கும் ஒற்றைக் குடிசை. முற்றத்தில் எந்தப் பயனுமற்று நெடுத்து வளர்ந்து நிற்கும் ஒற்றை மலட்டுத் தென்னை மரத்தின் மீது மெல்லிய, கடற்காற்று தன் இஷ்டத்திற்கு விளையாடும். காய்த்து விழுவதற்கு குரும்பைகூட இல்லாமற் போனதால் அணில்கூட அண்டாத மலட்டுத் தென்னை.

முன்னால் விரிந்து பரந்து கிடக்கும் கடலில் இன்று அலைகள்கூட எழவுமில்லை, விழவுமில்லை.

எந்த நிகழ்வுகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதாய்க் கூறிக்கொள்கிறது கடலின் மௌன விரதம்.


கிழக்குப் பனங்கூடலை விலத்தி மேலெழுந்தும் சூரியன் முகங்காட்ட மனமில்லாமல் முகிலினுள் புதைந்து கிடந்து வெப்பமற்ற வெளிச்சத்தைப் பூமிக்குப் பிச்சை போட்டுக் கொண்டிருந்தான்.

அலைகளற்ற கடலின் மேனியில் பார்வையை மேயவிட்டபடி அன்னம்மாள் கிளுவை வேலியருகில் குந்தியருந்து ஊரிமணலை விரல்களால் உழுதுகொண்டிடிந்தாள்.

"அருள்ச் சித்தப்பு இண்டைக்குக் கடல்ல கால் வைச்சிருக்கிறார் போல கிடக்கு" கடிப்பு வலையை வேலியருகோடு சாய்த்து வைத்தபடி இருதயம், அன்னம்மாள் குஞ்சியின் சிந்தனையைக் கலைத்தான்.

"ஓமடா மோனே.... எத்தினை நாளைக்கெண்டுதான் பயந்து பயந்து பட்டினி கிடந்து சாகிறது. அகலக் கடலுக்குப் போனால் அடையாளக் காட்டுக் கேட்டு அடிச்சுக் கொல்லுறாங்கள் அறுந்து போவார். கொள்ளையிலை போன விதானைப் பயல் பாரை, சிறையா எண்டு வாங்கித் திண்டுபோட்டு அடையாளக் காட்டுத் தாறானுமில்லை. வெள்ளாப்புக்குக் கொஞ்சம் முன்னதாத்தான் கொடியில கிடந்த வலயையும் தூக்கிக்கொண்டு,

**தமயந்தி**



www.tamilarangam.net

பயலையும் இழுத்துக் கொண்டு பெரியபுட்டிக்குடாப் பக்கம் போனவர். விடிஞ்சு இவவளவு நேரமாகுது ஆக்களக் காணயில்ல" ஊரிக்குவியலைக் கூறு போட்டபடி கூறிமுடித்தாள் அன்னம்மாள்க் குஞ்சி.

"ராத்திரிநல்ல ஈராட்டியாக் கிடந்துது. காத்தும் அவ்வளவாக இல்லை. ஏதாவது கொண்டு வருவினம்" என்றபடி இடுப்பில் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து தலையில் தலைப்பாகை கட்டியபடி சொன்னான் இருதயம்.

"அது சரியடா மேனே நீ உந்த உலம்பல் கரைக்குள்ள களங்கண்டியைக் கட்டியிருக்கிறாய், ஏதாவது வலையிலை ஏறுதாடா மேனே?" என வினவினாள் தலைப்பாகை கட்டி முடித்து, கடிப்புவலையைச் சரி செய்து கொண்டிருந்த இருதயத்தைப் பார்த்து.

"என்னணை குஞ்சி செய்யிறது? இருந்த தோணியையும் பஞ்சத்தோட வித்துத் திண்டாச்சு, தோணியில்லாமல் வலைய எங்க கொண்டேய் பாயிறது? இதில கரைக்குள்ள கட்டினபடியா இறங்கியாவது இழுக்கலாம். ஏதோ... ரெண்டு கிலோ ஒரு கிலோ கணவாயாவது கிடைக்குது. காலச் சாப்பாட்டோட[illegible]போகுது"

கடிப்பு வலையைச் சரிசெய்து சுருட்டிக் கொண்டு களங்கட்டி வலையை நோக்கி கடலில் இறங்கி நடந்தான் இருதயம்.

மீண்டும் பரந்த கடலின்மீது விழிகளை மேயவிட்டு காத்திருந்தாள் கரையில் அன்னம்மாள். கண்களுக்கு எட்டிய தொலைவில் தோணிகள் எதுவும் புலப்படவேயில்லை. ஒன்றிரண்டாய் அனேகமாய் எல்லாத்[illegible]தாணிகளுமே மேற்குத் துறைமுகத்தை வந்தடைந்துவிட்டன. மீன்காரப் பெண்டுகளும் சைக்கிள் வியாபாரிகளும்கூட கலைந்துபோய் விட்டனர். சில காகங்களும், கவாய்களும் மட்டும் காரல் குஞ்சுகளைப் பறந்து பறந்து பொறுக்கித் திரிந்தன.

அருள்ச்ச[illegible]ம்மாட்டியின் தொழில் என்றால் நிச்சயம் உழைப்பிற்குக் குறைவில்லாமல் தோணிகள் கரைக்கு வரும். மற்றைய சம்மாட்டிகளைப் போல தோணிகளைத் தொழிலுக்கு அனுப்பி வைத்துவிட்டு காலில் ஈரம் படாமல் கரையில் நிறபவரல்ல அருளர். தலைத்தோணியின் அணியத்தில் கடல்திறவு சொல்லியபடி தானும் ஒரு தொழிலாளியாய் தொழிலாளர்களுடன் உடலை வருத்தி உழைப்பவர்.

கடலின் நீரோட்டங்கள், காற்றின் நன்மை தீமைகள் நன்கறிந்து அதற்கேற்ப தொழிலை மீன்பிடிபாடுள்ள இடங்களுக்கு நகர்த்துபவர். தொழிலாளிகளின் பங்கை பிரித்துக் கொடுப்பதில் எந்தக் குறையும் வைத்திராத நீதியான மனுஷர். அழகிய குமரியாய் இருந்த அன்னம்மாளைக் கட்டுவதற்காக அப்பரையே எதிர்த்து வீட்டைவிட்டு கட்டியிருந்த துணியோடு வந்த மனுஷன். தன் பாரிய உழைப்பால் உயர்ந்து சம்மாட்டியாகி, கவ்வீடு தொழில் என்று சம்பாதித்துக் கொண்டவர்.

தனது மூத்த மகள் மரியாவின் விருப்பத்திற்கே அவள் காதலித்தவனையே கட்டிவைத்து வீடு, தொழில், சொத்து என்று எல்லாமே அவளுக்குச் சீராகக் கொடுத்துவிட்டு இளைய மகனோடும், மனைவியோடும் கரையின் மண்பிட்டியில் குடிசை கட்டி காலத்தை ஆமை அவகத்தில் நகர்த்திக் கொண்டிருக்கிறார் அருளர். 'சம்மாட்டி அருளர்' என்ற பெயரும் மிடுக்கும் சொல்லாமற் கொள்ளாமலேயே செத்துப் போயிற்று.

"நல்லாயிருந்த மனுஷன் ஊருக்கும், மகளுக்குமெண்டு பிச்சுப் பிச்சுக் குடுத்துப் [illegible]பாட்டு இப்ப நொந்து கிடக்குது" என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுதாப வார்த்தைகளை மட்டுமே ஊருக்குள் சம்பாதித்து வைத்திருந்தார்.

கடன்பட்டு இன்னொருவர் வீட்டு வாசலுக்குத் தன்னை அனுப்பவில்லை என்பதில் அன்னம்மாளுக்குப் பெருமை.எப்படியோ.... ஒரு நாளில் ஒருதடவையாவது அடுப்புப் புகைகிறது. உலையில் கொதிப்பது கஞ்சியோ கூழோ, அடுப்புப் புகைகிறது.

களங்கட்டி பட்டிவலை இழுத்துவிட்டு ஈரக்கடிப்பு வலையுடன் கரையேறி வந்துககாண்டிருந்தான் இருதயம். இரண்டு நண்டுகள் மட்டுமே கடிப்பு வலையினுள் துடித்துச் சரசரத்துக் கிடந்தன. கரையேறிய இருதயம் கடிப்பு வலையினுள்ளிருந்த இரண்டு நண்டுகளையும் வெளியே தூக்கி தரையில் போட்டான். கடிப்பு வலையை கிளுவை வேலியோடு சாய்த்து வைத்துவிட்டு தலைப்பாகையாய்க் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து உடுத்திக்கொண்டான். ஈரக் கோவணத்தை அவிழ்த்து தண்ணீரைப் பழிந்துவிட்டு கையின் மணிக்கட்டில் சுற்றிக் கட்டிக் கொண்டான்.

"என்னடா மோனே... உன்ர தொழில் முடிஞ்சுதா? ...? என்ற அன்னம்மாள்க் குஞ்சியின் கேள்விக்கு சிரித்தபடி "ஓம்" என்று பதில் கூறிவிட்டு "என்னணை குஞ்சி இன்னும் சித்தப்பு வரயில்லையோ...?"எனக் கேட்டபடி கடலை நோக்கினான் இருதயம்.

துாரத்தில் கறுப்பாய்த் தெரியும் தோணியைக் காட்டி "அதுதானோ பார் மோனே ..." என்றாள் அன்னம்மாள்.

"ஓமணை குஞ்சி....ஆனா..." விக்கித்து, வார்த்தைகள் தொக்கி நின்றன இருதயத்தன் கதொண்ணைக் குழியில்.

"என்னடா மோனே..?" சட்டென எழுந்து நடுங்கும் குரலில் அன்னம்மாள்



www.tamilarangam.net

இருதயத்தையும், கடலில் தூரத் தெரியும் தோணிக் கறுப்பையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லைக் குஞ்சி...பயப் ... பிடாதை அம்மணி குறுக்கை அடையிற மாதிரி...தெரியுது" படபடத்த இதயத்திலிருந்து எழுந்த வார்த்தைகள், தழுதழுத்து அறுந்து வெளிவந்தன.

காலையிலிருந்து கை, கால்கள் ஒருவித நடுக்கம் கொள்ள இதயம் வேகமாய் அடித்துக் கொள்ள அர்த்தமற்றுப் பயந்த அன்னம்மாள், இப்போ உடலின் நடுக்கமும், இதயத்தின் படபடப்பும் பதட்டமான பயமும் அர்த்தமுள்ளதாக உணர்ந்துகொண்டவளாய், சீரான அமைதியான கடல் வாசல் தொடும் அலைக்ளைப் பிரசவிக்கும் வண்ணம் பெருங்குரலெடுத்து அலறினாள். கடற்கரை மணல்மேடெங்கும் விழுந்து புரண்டாள். சீரைக் குலைத்து கடல் நீளமெங்கும், ஒப்பாரியோடு ஓடிவந்த அலைகள் அன்னம்மாளுக்கு ஆறுதல்கூற முடியாமல் கடலுள் மீளச் சென்றன.

முன் அறிவித்தலின்றி எழுந்து மூச்சுவிட்ட கச்சான் காற்றில் கிளுவங் கதியால்கள் சிலவற்றை முறித்தும், வேரோடு பெயர்த்தும் சாய்ந்து நிலத்தில் படுத்துக் கொண்டது முற்றத்துத் மலட்டுத் தென்னை.

"என்ன நடந்தது...?" என்பது போல் இப்போதுதான் மெல்ல முகிலை விலத்தி பாதி முகத்தை நீட்டி பூமியை எட்டிப் பார்த்தான் சூரியன்.

கரையிற் கிடந்த நண்டுகளிரண்டும் மெல்ல மெல்ல ஊர்ந்து கடலினுள் இறங்கி மறைந்துகொண்டன. ஒற்றைத் தென்னையின் சொற்ப நிழலும் செத்துப் போயிற்று. அம்பாக்கள் திரிந்த கரையோ ஒப்பாரியைச் சுமந்தபடி.

## குறைந்துவரும்...

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே நோர்வே நாட்டிலும் கருக்கலைப்பு எண்ணிக்கை அதிகமாகவே இருந்துவந்துள்ளது. ஆனால் தற்போது இக்கருக்கலைப்பு எண்ணிக்கையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 1990ஆம் ஆண்டில் இத்தொகை 6%ஆல் குறைந்துள்ளது.

1990இல் நோர்வேயிலுள்ள 19மாநிலங்களில் 17இல் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி 13,948பேர் கருக்கலைப்புச் செய்துள்ளனர். ஆனால் இத்தொகை 1989ஆம் ஆண்டில் 14,693ஆக இருந்தது. கிட்டத்தட்ட 800பேராக குறைந்துள்ளது.

அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி சராசரியாக ஆண்டுக்கு திருமணமான 1000பெண்களில் 10பேர் மட்டுமே கருக்கலைப்புச் செய்கின்றனர். ஆனால் திருமணமாகாத பெண்களில் இக்கருக்கலைப்புத் தொகை அதிகமாகவே உள்ளது. சராசரி வருடாந்தம் 1000 திருமணமாகாத பெண்களில் 22முதல் 23பேர்வரை கருக்கலைப்புச் செய்கின்றனர்.

– வனிதா –

## தமிழ்நாதம்

ஒஸ்லோவில் தமிழ் வானொலி ஒலிபரப்பான Radio Immigranten இன் தமிழ்நாதம் ஞாயிறு மாலை ஆறு மணிக்கு பண்பலை(Fm) வரிசையில் 101,1 மீற்றரில் ஒலிபரப்பாகிறது.

—செய்தியாளன்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்ல்ஸ் - ஜெ- போமன்

# சுவீடனில் புதிய அரசியல்

புரட்டாதி மாதம் 15ம் திகதி சுவீடனில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் இரு புதிய கட்சிகள் பாராளுமன்றத்தில் நுழைந்தன. அதேவேளை கடந்த பொதுத் தேர்தலில் புதிதாகத் தெரிவாகி ஆளும்கட்சி வரிசையில் இருந்த பச்சைக் கட்சி பாராளுன்றத்துக்குள் நுழைவதற்கு வேண்டிய மிகக் குறைந்த 4% வாக்குகளைப் பெற்த தவறியதால் வெளியேறியது.

சுவீடனின் 'தொழிலாளர் கட்சி' எனத் தன்னை அழைத்துக்கொள்ளும் Social Demokrati 1928ம் ஆண்டின் பின்முதன்முறையாக மிக்க குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது. (38%) இன்னும் இதுவே சுவீடனின் மிகப் பெரிய கட்சியாக இருப்பினும் ஐரோப்பிய நாடுகளில் கடந்த வருடங்களில் நிகழ்ந்த சோசலிச நாடுகளின் வழ்ச்சிகளால் இடதுசாரிக் கட்சியும் இதன் சகாவுமான Vanster parti (இடதுசாரி)யும் மிகக் குறைந்த (4.5%) வாக்குகளையே பெற்றது.

22.1% வாக்குகளைப் பெற்று முன்னேறியுள்ள Moderaterna (மிதவாதக் கட்சி) சுவீடனினன் வலதுசாரி அலை வீசுவதைக் காட்டுகிறது. அது மட்டுமன்றி 1991ல் தொடங்கப்பட்ட வலதுசாரித் தீவிரவாதக் கட்சியான Ny Demokrati (புதிய ஜனநாயகக் கட்சி) வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தினுள் நுழைந்து இதனை நிரூபிக்கிறது.

26வருடப் போராட்டத்தின் பின்னர் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி (KDS) 7.2% வாக்குகளைப் பெற்றும், உழவர் கட்சியாக ஆரம்பிக்கப்பட்ட Centern (மத்திய கட்சி) 8.6% வாக்குகளைப் பெற்றும் தாராள சுதந்திர மனப்பான்மை உடைய Folk Parti (மக்கள் கட்சி) 9.2%வாக்குகளைப் பெற்றும் பாராளுமன்றத்தில் நுழைந்துள்ளன.

இந்த முடிவுகள் மூலம் 349 பாராளுமன்ற உறுப்பினர்களில் இரு இடதுசாரிகளும் 154 இடங்களைப் பெற தம்மிடம் உள்ள 170 உறுப்பினர்களுடன் மற்ற நான்கு கட்சிகளும் புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. பல சந்தர்ப்பங்களிலும் தன்னை ஒரு நிறவெறிக் கொள்கை கொண்ட கட்சியாகக் காட்டிக்கொண்ட Ny Demokrati 25ஸ்தானங்களுடன் மற்றக் கட்சிகளால் தனிமைப்படுதப்பட்டாலும் ஒரு தலைவலியாக நிற்கிறது. ஒரு மசோதாவை நிறைவேற்றக்கூடிய அடிப்படைத் தேவையான 175 வாக்குகளைப் பெற அரசு மறைமுகமாக இந்தக் கட்சியில் தங்கியுள்ளது.

புதிய அரசின் பிரதமராக கார்ள் பில்ட் (Carl Bildt) தெரிவாகியுள்ளார். Moderaterna கட்சியைச் சோந்த இவருக்கு வயது 42. இவரது பாட்டனாரின் பாட்டனார் 1888 – 89 காலப்பகுதியில் சுவீடனின் பிரதமராக இருந்தவர். 'புத்திசாலித்தனமான, கடுமையான அரசியல்வாதி' எனக் குறிப்பிடப்படும் கார்ள் பில்ட் தனது அரசியல் வாழ்க்கையைப் பள்ளிப் பருவத்திலயே தொடங்கியவர். தனது 24வது வயதில் கட்சியின் மாணவர் அமைப்புத் தலைவராகி 1986ல் கட்சியின் தலைவர் பதவியைக் கைப்பற்றியவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய அரசில் பாதுகாப்பு, வெளிவிவகாரம், வரிவசூலிப்பு, கல்வி , நீதித்துறை, தொழில்துறை ஆகிய அமைச்சுகளை பிரதமரின் கட்சியே பொறுப்பெடுத்துள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, விவசாயம், தொழில்துறை அமைச்சுகள் மத்திய கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தபால் - தந்தி, போக்குவரத்து, சமூகநலம் என்ற அமைச்சுகளைப் பொறுப்பேற்றுள்ளது. Folk Parti நிதியமைச்சு, குடியேற்றம், அகதிகள் நலத்துறை, சுகாதாரத்துறை என்பனவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது.

'சுவீடனுக்குப் புதிய ஆரம்பம்' என்ற கோஷத்துடன் களத்தில் இறங்கியுள்ள இவர்கள், தேர்தலுக்கு முன்பு கொடுத்த குழந்தைகட்கான உதவித்தொகை அதிகரிப்பு, வரிக்குறைப்பு போன்ற வாக்குறுதிகளை, 'கஜானா காலி' என்று கூறிப் பின்போட்டுள்ளனர்.

சுவீடனின் பொருளாதாரம் 1989ல் இருந்து இறங்குமுகமாகவே சென்றுகொண்டிருக்கிறது. வேலையில்லாதவர்களது விகிதம் 4.5% என்பது இரண்டாம் உலக மகா யுத்தத்தின்பின் நாட்டின் மிகமோசமான நிலைக்குச் சான்று என்றே கருதப்படுகிறது. புதிய நிதி ஆண்டின் துண்டுவீழ்ச்சியானது 900கோடி குறோணர்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதனைச் சமாளிக்க அரசு பல செலவுக் குறைப்புகளையும், புதிய பொருளாதாரக் கொள்கைகளையும் முன்வைத்துள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் எண்பதுகளில் கொண்டுவரப்பட்ட அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்கி விற்பதும் ஒரு கொள்கை. இதன் ஆரம்பமாக நல்ல வருமானம் தரும் அரசின் தொழிற்சாலைகள் 35இன் பங்குகள் விரைவிலேயே விற்பனைக்குத் தயாராகின்றன.

சிறுதொழில் தொடங்க உதவிகள் செய்வது, முடிந்தவரை எல்லாத் தொழில்களுக்கும் போட்டிகளை உருவாக்கி, இன்று பல துறைகளில் நிலவும் ஏகபோக உரிமைத்தனத்தைத் தகர்ப்பது என்பனவும் அரசின் கொள்கைகள்.

ஆட்சியில் உள்ள கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி மற்றும் மக்கள் கட்சி என்பன தமது

## *என் தேசம்*

ஊருக்குள் ஒரு தேசம்
பரந்து விரியும்
உலகை கடுகாக்கி

இங்கு நானே ராஜா.
என் பங்கிற்கு
வரம்பு துருத்தி
வயல் உழுது
வியர்வையோடு நீர் இறைத்து
காவல் விழித்த
கண்களோடும்,
அறுவடைக்குப் பதமான
கைகளோடும்
நான் நானாக.

என் வியர்வைக்கு
பங்கில் படியளப்பர் மக்கள்.
இவர்கள்
என் தவறுக்கு நீதிவைத்து
கழுமரத்தில் ஏற்றும்
அதிகாரத்தோடு.

இங்கு முகிழும் மகிழ்வோடு
மக்கள்
அவர்களோடு நானும்

**சின்னா**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேர்தல் அறிக்கையில் அரசியல் அந்தஸ்து பெறுவதற்கான கொள்கைகள் இலகுவாக்கப்படும், சர்வாதிகாரிகளால் ஆளப்படும் நாடுகட்கு உதவித் தொகைகள் தொழில்நுட்ப உதவிகள் நிறுத்தப்படும் என வாக்குறுதிகள் வழங்கியிருந்தன. இவ்விரு கட்சிகளே இது தொடர்பான அமைச்சுகளைக் கைப்பற்றியுள்ளன. இதனால் முந்திய அரசால் கடுமையாக்கப்பட்ட அரசியல் தஞ்சக் கோரிக்கைச் சட்டம் போன்றன இலகுவாக்கப் பட்டுள்ளன. அரசியல் தஞ்சம் கோரி, விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப் படாதவர்களது விண்ணப்பங்கள் மறுபரிசீலனைக்கு எடுக்கப்படுகின்றன. விரைவில் அரசியல் தஞ்சம் கோருவோருக்கான தற்காலிக வேலை அனுமதி பற்றிய முடிவு பாராளுமன்றத்தில் எடுக்கப்பட உள்ளது.

நிறவெறியைப் பாராளுமன்றத்தினுள் கொண்டுவந்ததாக, ஏனைய அனைத்துக் கட்சிகளாலும் விமர்சிக்கப்படும் **Ny Demokrati** வளரும் நாடுகளுக்கென அரசின் மொத்த வருமானத்தில் இருந்து ஒதுக்கப்படும் தொகையான 1%இன் சரிபாதியை புதிதாகச் சுதந்திரம் பெற்ற போல்டிக் குடியரசுகளுக்குச் செலவிடக் கோருகிறது. சுமாராக இதேபோன்ற கருத்தை புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்திய சுவீடன் மன்னனும் குறிப்பிட்டது பல அரசியல்வாதிகளாலும் கண்டிக்கப்பட்டது. சுவீடனின் சம்பிரதாய மன்னனுக்கு அரசியல் விழாக்களில் தனிப்பட்ட அரசியல் கருத்து எதனையும் தெரிவிக்க உரிமையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

●






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனது இனத்துப் பேனையால் அழுதது

நிலவுக்கு வேலியிடு.
சூரியனையும் பங்குபோட்டுப் பகிர்ந்துகொள்.
வெள்ளிகளை எண்ணு
இன விகிதாசாரப்படி பிரி.
நாகரிக யுகத்து மனிதர்கள் நாம்!


கடலை அளந்து எடு.

வானத்தைப் பிளந்து துண்டாடு.
சமயம் வந்தால்,
காற்றைக் கடத்து.
அல்லது,
சூறாவளியைக் கொண்டு சகோதர இனத்தை அழி.
அங்கே
செவ்வாய் கிரகத்தில் நம்மில் ஒருவன் இறங்கட்டும்.

எறும்புக்கும்
இனமுத்திரை இடு.
மரத்திற்குக்கூட
சாதி சமயத்தைப் புகட்டு.
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து.
பல்லியும் பூச்சியும் நத்தையும் தவளையும்
கத்தும் ஒலியெல்லாம் பேதங்கள் தொனிக்கட்டும்.
வா,
வண்ணத்துப் பூச்சியே!
இது உன்னுடைய இனத்து மலர்தான் நுகர்.

பாவம்,
மனிதன் பிரிந்த விதம்!
நான்கூட இந்தக் கவிதை எழுதுகையில்
ஒரு பேனை மறுத்தது
"உனது இனத்துப் பொருளல்ல நானென்று"
ஓ.... அது வேறு இனத்துப் பேனை!

சோலைக்கிளி
26111989



இருப்பு என்ற புதிய காலாண்டிதழ் கிடைத்தது.
இதன் ஆசிரியர்கள் சோலைக்
"சுதந்திரமாக எமது படைப்புகளையும் கரு
'இருப்பு' வெளியீட்டின் அவசியம் உ
இன்றைய இலக்கியப் போக்கின், ச
கொதிப்புகளையும் அலசிக்கொள்வது
இவ்வாறு தமது சஞ்சிகையை அறிமு
பரப்பில் நன்கு அறியப்பட்ட கவிஞ
முடியுமானவர்கள் பொருளாத
[redacted]. முகவரி: 'இருப்பு'

இருப்பு சஞ்

www.tamilarangam.net



கல்முனையில் இருந்து வெளிவரும்
ஒளி, எச்.எம்.பாறூக்.
துகளையும் பரிமாறிக்கொள்வதற்கு
ரப்பட்டமையின் விளைவே இது.
கப் போக்கின் முரண்பாடுகளையும்
இதன் இரண்டாவது நோக்கமெனலாம்"
ம் செய்யும் ஆசிரியர்கள் ஈழத்து இலக்கியப்
கள். இந்தச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர,
ார உதவிகளைச் செய்வது நல்லது, 4
, சோலைக்கிளி, 374, செயிலான் வீதி, கல்முனை

சிகையில் இருந்து இரு கவிதைகள்

## நானும் நாயும் காகமும்

நடு இரவில் ஊளையிடும்
நாய்க்கு நான் பயம்.

பின்னேரம்
கேற்றடியில்
எனைப் பார்த்த நாயின் பார்வை
சரியில்லை.

நான் இன்னும்
துப்பாக்கியால் சுடப்பட வில்லை.
கத்தியால் குத்தப்படவும் இல்லை.
வீதியின் ஓரத்தில் நெருப்பில்
அரைகுறையாய்
எரியவும் இல்லை.

நாய் பார்க்கும்போது
நடுங்குகிறேன்.
நாயின் பார்வை
சரியில்லை.

மாமா வருவாரா
தெத்திக்காட்டு காகம்
என உம்மா சொல்ல,
அங்கிருந்து இங்கு
இங்கிருந்து அங்கு
தெத்திக் காட்டி செய்தி சொல்லும்,
காகத்திலும் பயம்
அதிகரிக்கின்றது.

செத்த மனிதரின் தலையைக் கொத்தும் காகம்.
செத்த மனிதனின் வயிற்றைக் குதறும் நாய்.

எச்.எம்.பாறூக்

www.tamilarangam.net

# ஒரு பொருளாதார உறவு வலை

ஐந்து வருடங்கள் முன்னதாக ஸாம்பியாவில் ஒரு உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. மானியங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும், அதன் காரணமாக அத்தியாவசிய நுகர்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட திடீர் இரட்டிப்பு விலை அதிகரிப்புமே இதற்கு முக்கிய காரணங்கள். இந்த நிலைக்கு முக்கிய காரணங்கள், உலக வங்கியும், ஐரோப்பிய சமூகமும், நிதி உதவிக் குறைப்புச் செய்ததுடன் தனியார் மயப்படுத்தல் மற்றும் ஆட்குறைப்புக்கு நிர்ப்பந்தம் செய்தமையும் ஆகும். தவிர அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய சமூகத்துக்கும் இடையில் நிலவிய இழுபறியும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

ஸாம்பியாவில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த ஐ.ச. முனைவது ஏன்? ஆபிரிக்காவின் பெரும் பகுதி கடந்த நூற்றாண்டுகளில் பல ஐரோப்பிய நாடுகளின் காலனிகளாக இருந்தது. இப்போதும் காலனியாளர்கள் இந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க அரசியல் ஆளுமை கொண்டுள்ளனர். வறுமை நிறைந்த ஆபிரிக்க நாடுகள் தம்மைத் தாமே சுயாதீனமாக ஆள இவை முக்கிய தடைகளாக விளங்குகின்றன. இவற்றால் உருவாக்கப்பட்ட 'கடன்' சுமை ஆபிரிக்க நாடுகள் தலைநிமிர விடாமல் செய்கிறது. வரவரக் கூடிக்கொண்டு செல்லும் இந்தக் கடன் காரணமாக 1984ல் ஏற்றுமதி வருமானத்தில் 19% கடன் செலுத்தவும், 1989ல் 47% கடன் செலுத்தவும் வேண்டிய நிலைக்கு ஆபிரிக்க நாடுகள் தள்ளப்பட்டன.

ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலானவை ACP (ஆபிரிக்க, கரிபியன், பசிபிக்) நாடுகள் கூட்டமைப்புக்குள் வருவன. இந்த நாடுகளும், ஐரோப்பிய சமூகமும்



www.tamilarangam.net

ஏற்றுமதிப் பொருட்களுக்குக் குறைந்த வரி போன்ற அம்சங்கள் கொண்ட ஒரு பொருளாதார ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளன. பொதுவாக மூன்றாம் உலக நாடுகளால் மிகவும் விரும்பப்படும் இவ்வாறான ஒப்பந்தம் பொருளாதார மாற்றங்களையும் ஏற்படுத்தக் காரணமாகிறது.

இந்த ஒப்பந்தங்கள் பழைய காலனி நாடுகளுக்காகப் பரிவுடன் அமைக்கப்பட்டவையா? இவை ஐரோப்பிய சமூக நாடுகளின் தேவைகளான கோப்பி, கொக்கோ, செப்பு மற்றும் கனியங்கள், வாழைப்பழம் உட்பட்ட பல மூலவளங்களை மலிவாகவும் இலகுவாகவும் பெற வழியமைக்கின்றன. அதேவேளை இந்த நாடுகள் தொடர்ந்து இவ்வாறு மூலப் பொருட்களை உற்பத்தி செய்யவும், தமது தொழிற்சாலைகளுடன் போட்டி போடாமல் இருக்கவும் உற்பத்திப் பொருட்களுக்குக் கூடுதல் வரி விதிப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் கட்டுப்படுத்துகின்றன. ACP நாடுகளின் 90% ஏற்றுமதி ஐரோப்பிய சமூகத்திற்கான மூலப்பொருட்களாகும். இதேவேளை இந்த நாடுகளுக்கான ஐரோப்பிய சமூக நாடுகளின் ஏற்றுமதி 85%மும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களாகும்.

இந்த ஒப்பந்தத்தில் உலகச் சந்தையில் விலை ஏற்றத்தாழ்வு ஏற்படுகையில் அதைச் சரிசெய்ய ஒரு நிதியமும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ACP நாடுகள் கூடிய நிலப்பரப்பை இவ்வாறு மூலப்பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்றன. இதனால் சுயதேவைக்கான வளம் குறைவதோடு பொருளாதார நெருக்கடியும் உற்பத்தி வீழ்ச்சியும் ஏற்படுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக இந்தியாவிற்கான பால் விற்பனையைப் பார்க்கலாம். வெண்மைப் புரட்சி என இந்தியாவின் ஆட்சியாளர்கள் வர்ணித்த இந்த 'வியாபார'த்தில் மாட்டுத் தீவனத்தை ஐ.ச.வுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இந்தியா பயிரிடுகிறது. ஐ.ச. இந்தியாவுக்கு பால்மா வினியோகம் செய்கிறது. இவற்றின் செலவுகளைக் கவனிக்கும்போது இதே அளவு மாட்டுத் தீவனத்தைக் கொண்டு ஆறில் இருந்து பத்து மடங்கு பால் வரை உற்பத்தி செய்யலாம் என யாரும் அறியலாம். அத்தோடு இந்த மாட்டுத் தீவன விளைநிலத்தில் சுய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய பெருமளவு உணவு உற்பத்தி செய்யப்படலாம். ஐரோப்பிய சமூக நாடுகள் தமது பழைய காலனி நாடுகளை, தமக்கு வேண்டிய மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும்

---

இலங்கை அரசின் 'பாதுகாப்பு' நடவடிக்கைகள் எப்போதும் மக்களை நாசம் செய்யும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன. 10.06.90 முதல் கடந்த மே மாத முடிவு வரை கிழக்கில் இவ்வாறு அரச பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாகப் பெருமளவு மக்கள் காணாமல் போனதாக ஈபிஆர்எல்எ:ப், ஐ.நா மனித உரிமைகள் குழுவிடம் தெரிவித்துள்ளது. இவர்களில் 2249பேரின் விபரங்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. குறைந்தபட்சம் மொத்தம் 6021பேர் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த அறிக்கையின்படி திருமலை மாவட்டத்தில் 980பேரும் (471பேரின் விபரம் உள்ளது), மட்டக்களப்பு மாவட்டத்தில் 3825பேரும் (1312), அம்பாறையில் 1216பேரும் (486) காணாமல் போயுள்ளனர்.

இதுதான் இலங்கை அரசு தனது நாட்டின் ஒரு பகுதியை நடத்தும் விதம்.

தேசபக்தன்

www.tamilarangam.net

இடங்களாகவே வைத்திருக்கின்றன. அதேவேளை அந்த நாடுகளின் சுதந்திரமான பொருளாதார வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகின்றன.

1993ம் ஆண்டுக்குப் பிறகு இந்த நிலைமைகள் எப்படி இருக்கும் எனப் பார்க்கும்போது, முதலாவதாக ஐ.ச.இற்குள் ஒரு பொதுவான சந்தை ஏற்படுகையில் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்திக்குக் குறைந்த மதிப்பே இருக்கும். இரண்டாவதாக ஐ.ச. நாடுகளின் உற்பத்தி அதிகரிக்கையில் ஏற்றுமதி அதிகரிக்கும்; கூடுதலான மூலப்பொருட்கள் தேவைப்படும். இதனால் ACP நாடுகளுக்கிடையில் போட்டி அதிகரிக்கும். முன்பு ACP நாடுகள் சில ஐரோப்பிய சமூக நாடுகளுடன் தனிப்பட்ட ஒப்பந்தம் வைத்திருந்தன. இனிமேல் அது சாத்தியமில்லை. மூன்றாவதாக, மூன்றாம் உலக நாடுகளில் முதலீடுகள் பெரும் வீழ்ச்சி அடையும். மூன்றாம் உலக நாடுகள் ஏற்றுமதி வருமானத்தில் பெருமளவு தங்கியிருக்க நேரிடும். ஐரோப்பிய சமூகத்தின் முக்கிய குறிக்கோள் மையப்படுத்தப்பட்ட உற்பத்தியைப் பெருக்கி, இப்போது முன்னணியில் நிற்கும் அமெரிக்கா, ஜப்பானுடன் போட்டி போடுவதாகும். இதில் ஏற்கனவே ஐ.ச. ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. 1987ல் ஐ.ச., அமெரிக்காவைவிட உணவு ஏற்றுமதியில் முன்னணியில் நின்றது. அதன் 50% ஏற்றுமதி மூன்றாம் உலக நாடுகளுக்காக இருந்தது. இறக்குமதியிலும் முன்னின்ற ஐரோப்பிய சமூகம், 60% இறக்குமதியை மூன்றாம் உலக நாடுகளில் இருந்தே பெற்றது. மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தியாகும் விவசாய உற்பத்திப் பொருட்கள், ஐரோப்பிய சமூகத்தின் உற்பத்திப் பொருட்களின் மலிவான விலையால் மூழ்கடிக்கப்படும். சொந்தமாகத் தொழிச்சாலைகளை நிறுவுவதும் இந்த நாடுகளால் கட்டுப்படுத்தப்படும். பன்னாட்டு நிறுவனங்களின் குறுக்கீடு இல்லாமல் தொழிற்சாலைகளை நிறுவுவது முடியாத காரியமாகிவிடும். இதனால் வல்லரசுகள் மூன்றாம் உலக நாடுகளைக கூட்டுக் கொள்ளை அடிப்பது சுலபமாகிவிடும்.

சிறி ஜென்சன்

தமிழில் சங்கரன்

திவாலாகிப் போன இலங்கை அரசின் கடைசி வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 6962கோடி ரூபாய்கள். இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் விழுந்துகொண்டிருக்கும்போது தமிழ்மக்களை ஒடுக்குவதற்காக அரசு 1542கோடி ரூபாய்களை பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஒதுக்கியுள்ளதுடன் இந்தத் தொகையும் போதாது என்று கூக்குரலிடுகிறது. நாடு எப்படி ஆனாலும் தமிழரை ஒடுக்குவதே தனது முதல் குறிக்கோள் என்பதை அரசு மீண்டும் மீண்டும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

தேசபக்தன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு உரையாடல்

"ஹலோ!"

"ஹலோ"

"........."

"ஹலோ யார் கதைக்கிறீங்கள்?"

"ஹலோ!"

"ரெலிபோன் பூத் பழுதோ?"

"ஹலோ 'பூத்' பழுது போலை கிடக்கு, வேறை 'பூத்'திலைபோய் எடுங்கோ"

"இல்லை அக்கா அது பழுதில்லை"

"என்ன புதுக்குரலா இருக்கு! ஹலோ யார் கதைக்கிறீங்கள்?"

"........."

"சத்தத்தைக் காணேல்லை!"

"..ஸ்...ஸ் உ:பிக் உ:பிக்..."

"ஆர் அங்கை சேட்டைவிடுகிறது! phoneஐ வைக்கட்டே?"

"இல்லை அக்கா வைச்சுப்போடாதைங்கோ!"

"ஆர் நீங்களெண்டு சொல்லுங்கோ முதலிலை!"

"அக்கா! அத்தான் இல்லைப் போல"

"........."

"வேலைக்குப் போட்டார், என்ன! எனக்குத் தெரியும்"

"........."

"என்னக்கா பேசாமல் நிக்கிறியள்?"

"........."

"தனியத்தானே நிக்கிறீங்கள், வரட்டே? அல்லாட்டி நீங்கள் மெத்ரோவுக்கு வாறிங்களே வந்து கூட்டிக்கொண்டு போறன்"

"ராஸ்கல்! ஆரோ, தனிய இருக்கிறன் எண்டதைத் தெரிஞ்சுகொண்டுதானே சேட்டைவிர்றான், அக்கா தங்கச்சியோடை கூடப் பிறக்கேல்லைப் போல, நாயள்"



www.tamilarangam.net

"............"

"............"

"அக்கா, அக்கா, அக்கக்கா! என்னக்கா!"

"சனியன்களுக்குப் பாட்டுவேற. இதுகளோடை என்னத்தைக் கதைக்கிறது; வரட்டுக்கும் இவர்!"

...கிளக்.....

OOOOOOOOOOOOO

"என்ன றேணு! 'உம்'மெண்டுகொண்டிருக்கிறீர்?"

"........."

"என்ன றேணு?"

"........."

"தென்னடா இது!"

"ஓ உங்களுக்கென்ன! அப்பவும் சொன்னனான், இந்தப் பரிஸ் வேண்டாம் நாங்கள் செத்தாலும் பறவாயில்லை சிலோனுக்கே போவமெண்டு...."

"இப்ப..... இப்ப.... என்ன நடந்தது? ஏன் அழுகிறீர்?"

"பின்ன என்ன நீங்கள் வேலைக்குப் போயிடுவியள், நான் இஞ்சை தனிய இருந்து...."

"தனிய இருந்து..!"

"..காவாலி நாயள் யாரோ ரெலிபோன் பண்ணி என்னென்னவோ எல்லாம் கேட்கிறாங்கள்....!"

"ஓகோ! அந்தப் பிரச்சினையே! அது இஞ்சேயும் வந்திட்டுதே! இதெல்லாம் பரிஸில நோ(ர்)மல் செல்லம். இதுக்குப் போய்...."

"ஓ உங்களுக்கென்ன! இஞ்ச எனக்குத் தனிய இருக்கப் பயமா இருக்கு"

"இதுக்கு நான் இனி இன்னொரு கலியாணமெல்லோ கட்டவேணும்போலக் கிடக்கு"

"உங்களுக்குப் பகிடியாக் கிடக்கு, நீங்கள் வரும்வரையும் நான் நடுங்கிக் கொண்டிருந்தது ஆருக்குத் தெரியும்"

"அழாதேயும், அழாதேயும் ! இது அனேகமா எல்லாத் தமிழாக்களின்ரை வீட்டையுந்தான் நடக்குது"

"இந்த நாயள் என்னத்துக்கு இப்பிடிச் செய்யிறாங்கள்?"

"இது றேணு! ஒரு பிரச்சினை!"

"என்ன பிரச்சினை?"

"அது.... இஞ்சத்தச் சூழலும் ஒரு பக்கம்தான். கனபொடியள் இஞ்ச வயசாகியும் கலியாணம் கட்டாமல் இருக்குதுகள்"

"அதுக்கு!"

"அடிக்காதேயும்! அடிக்காதேயும்! அதுகளுக்கு இப்பிடி 'ரெலிபோன்' பண்ணிப் பொம்பிளையளோடை கதைக்கிறதிலை ஒரு திருப்தி. அதோட 'தண்ணி'யும் அடிச்சிட்டா நரம்புகளும் வேறை முறுகிக்கொண்டு நிக்கும். பாவங்கள்தானே! கதைச்சுப்போட்டுப் போகட்டுமன். இனிமேல் இப்படிப் போன் வந்தால் ஆத்திரப்படாதேயும், கொஞ்சம் அமைதியாக அட்வைஸ் பண்ணிவிடும். பயப்பிடாதேயும் என்ன!"

"இதென்ன இது! நினைக்கச் சிரிப்பாயல்லோ இருக்கு!"

"சிரிப்புத்தான்! அதேநேரம் கவலையும்தான்!"

OOOOOOOOOOOOO

"ஹலோ!"

"ஹலோ யார் கதைக்கிறீங்கள்?"

"ஹல்லோ அக்கா!"

'ஓகோ இது அவர்தான். இவங்களுக்கு ஆகப் பயந்துகொண்டிருந்தால் தலைக்கு மேலை ஏறிவிடுவாங்கள்'

"...க்க்ம் ஓ தம்பியே! என்ன ரெண்டு நாளாப் **phone** பண்ணேல்ல எண்டு பாத்தன்"

" ! "

"என்ன தம்பி சத்தத்தைக் காணேல்ல?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" ! "

"உம்மடை பிரச்சனை பற்றி இவரோடை கதைச்சனான். உங்கட வருத்தங்கள் விளங்குது!"

"......"

"நீர் ஒரு கலியாணத்தைக் கட்டிறதுக்கு வழியைப் பாருமன்! சும்மா என்னத்துக்கு ரெலிபோனுக்குக் காசைச் செலவழிச்சுக்கொண்டு! வீட்டில கதைச்சுப் பேச வெக்கமெண்டா addressஐத் தாருமன். வீட்டுக்கு எழுதிவிடுறன்! எது வசதி?"

" ! ! "

"என்ன தம்பி சத்தத்தைக் காணேல்ல?"

" ! "

"தம்பி உமக்கு அக்கா தங்கச்சி இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனா நாங்கள் அண்ணன் தம்பியோடதான் கூடப் பிறந்தனாங்கள். உங்கட பிரச்சினையளைத் தீர்க்கிறதுக்கு நாகரீகமான வழியைப் பாருங்கோ! அதுதான் நல்லது. இப்பிடிப் பொம்பிளையள் தனிய இருக்கிற வீடுகளுக்கு phone பண்ணி அரியண்டம் செய்யிறது - அது அசிங்கம். இனிமேல் இப்பிடிச் செய்யாதேங்கோ..... என்ன! நல்லபிள்ளைதானே! என்னடி....!"

" ! ! "

......க்ளக்.......

■ நன்றி: ஓசை

---

## The Eluding Peace

இலங்கையின் தலைசிறந்த பத்தி எழுத்தாளரான (Columnist) 'தராகி' (TARAKI) எழுதிய பத்திகளின் தொகுதியான இந்த நூலை பிரான்ஸில் ASSEAY வெளியிட்டுள்ளது. இலங்கையில் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான Sunday Islandஇல் வாரந்தோறும் எழுதிவருபவரான தராகி தற்போதைய இலங்கைப் பத்தி எழுத்தாளர்களில் முக்கியமானவராகக் கணிக்கப் படுகிறார். The Eluding Peace என்ற இந்த நூலில் 89இன் பிற்பகுதியில் இருந்து 91 நடுப்பகுதிவரை வாராந்தம் அவ்வப்போதுள்ள அரசியற் சூழல் தொடர்பாக தராகி எழுதியவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர் வெளியீட்டாளர்கள்.

இந்த நூலைப் படிப்பவர்களுக்கு இந்தப் பத்திகள் எழுதப்பட்ட காலம் பற்றிய அரசியற் சூழல் இலகுவாகவும், ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் படைக்கப் பட்டிருக்கிறது எனப் புரிய முடியும்.

தவிரவும் 'தணிக்கையில்' மறைந்துபோன பல செய்திகளும் இந்த நூலில் காணக் கிடைக்கின்றன. இவ்வாறான ஒரு முயற்சி எமது தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் ஆங்கிலத்தில் இவாறு வெளிவரும் இந்த நூலின் ஆசிரியரான தராகி ஒரு தமிழர் என்பதும், ஒரு காலத்தில் தமிழ்ப் போராளிகளில் ஒருவராக அவர் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

இவ்வாறான ஒரு வெளியீட்டைச் செய்தமைக்காக ASSEAY (Arts Social Sciences of Ealam Academy, France) பாராட்டப்பட வேண்டியது. தபாற்செலவு உட்பட இந்த நூலின் விலை 40 பிராங்குகள் மாத்திரமே. இந்த நூலைத் தொகுதியாகவோ, தனியாகவோ பெற விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

ASSEAY,
3, Allee Paul Leautad
95200, Sarcelles
FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஐரோப்பா வாழ் தமிழர்களை உதிரிப் பாட்டாளிகள் என அழைக்கலாமா? அல்லது இவர்களை எத்தகைய சமூகப் பிரிவுக்குள் அடக்குவது?*

கே.சிவானந்தராஜா
ரொறன்ரோ, கனடா

ஐரோப்பா வாழ் தமிழர்கள் (ஐ.தமிழர்) எல்லோரையும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்துக்குள் அடக்க முடியாது. வர்க்கத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் அவர்களை ஒன்றுக்கு மேற்பட்ட வர்க்கப் பிரிவுகளாகப் பார்க்கலாம். அவர்கள் எல்லோரும் தமிழர் எனும் பரந்த சமூகப் பிரிவுக்குள் அடங்குவர் எனினும் அந்தச் சமூக வட்டம் பல பிரிவுகளைக் கொண்டது. ஐரோப்பியத் தமிழ்ச் சமூகத்துக்குள் அதற்கே உரிய சமூக அந்தஸ்துப் பிரிவுகள் உண்டு. நிலைமைகளுக்கேற்ப இந்த அந்தஸ்துகளின் சின்னங்களும் தகைமைகளும் மாறுகின்றன. உதாரணமாக இந்தக் காலத்தில் ஒரு தமிழருக்கு ஐரோப்பிய நாடொன்றின் பாஸ்போர்ட் கிடைத்துவிட்டால் அதுவே ஒரு விசேஷ சமூக அந்தஸ்தின் சின்னமாகிறது. இன்னொரு முக்கிய மட்டத்தில் ஐ.தமிழர் எல்லோருமே 'கறுப்பர்' எனும் 'அரசியல் நிறப்பிரிவு'க்குள் அடங்குவர். அரசியல் சமூக ரீதியில் ஐரோப்பாவில் வெள்ளையர் அல்லாதோர் 'கறுப்பர்'. இந்த விடயத்தைப் பல தமிழர்கள் இன்னும் சரியாக உணரவில்லை. தமிழர்கள் கறுப்பு நிறத்தை ஆபிரிக்கர்களின் பிரத்தியேகச் சொத்தாக்கிவிட்டார்கள். பல தமிழர்கள் 'காப்பிலிகள்' பற்றி சற்று மமதையுடன் பேசிக் கொள்வதைக் காணலாம். ஐ.தமிழரின் வர்க்க சமூகத் தன்மைகள் பற்றி சற்று விபரமாகப் பார்ப்போம்.

ஐ.தமிழர்களை அவர்களின் குடிபுகல் காலகட்டங்களின் அடிப்படையில் இரண்டாகப் பகுத்துப் பார்க்கலாம். இது வெறும் காலகட்டம் பற்றிய பிரிவு அல்ல. இதில் வர்க்க, சமூக தன்மை ரீதியான வேறுபாடுகள் உண்டு.

(1) 1950 - 1970 காலகட்டங்களில் மிகவும் குறிப்பாக 1960களில் இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்தவர்கள். இந்தக் காலகட்டத்தில் பலர் வேறு ஆங்கிலம் பேசும் நாடுகளுக்கும் குடிபெயர்ந்தனர். - உதாரணமாக அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா, கனடா, நியூஸிலாந்து. இப்படிக் குடிபெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கப் புத்திஜீவிகள் (Mental Workers). இவர்களில் ஒருபகுதியினர் பொறியியல், மருத்துவம், இயற்கை விஞ்ஞானம், முகாமையியல் போன்ற துறைகளில் உயர் பட்டங்கள் பெற்றவர்களாகவும் பலவருட அனுபவம் பெற்றவர்களாகவும் இருந்தனர். இன்னொரு பிரிவினர் குடிபுகுந்த

# எனது சமூகத்திரளா பதில்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டில் மேற்படிப்பை மேற்கொண்டும், அடிப்படைத் தாராதரங்களை உடையோராய் அல்லது புதிய வேலைகளுக்கு தம்மைத் தயார் செய்யக்கூடிய பயிற்சிகளைப் பெறக்கூடியோராய் இருந்தனர். இந்தக் காலகட்டத்தில் இலங்கையில் இருந்து தமிழ்ப் புத்திஜீவிகளின் வெளியேற்றத்துக்கு ஒரு உட்காரணியாக சிங்களம் மட்டும் சட்டமும் இனப்பாகுபாட்டு அரசியலின் எழுச்சியும் இருந்தன எனக்கருதலாம். ஆனால் இந்த 'Push factor'ஐ மட்டும் வைத்து இவர்களின் வெளியேற்றத்தை விளக்கிவிட முடியாது. ஒரு பலமான 'Pull factor'உம் இருந்தது. அதுதான் மேற்கத்திய நாடுகளின் துரித பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்திய மனிதவளத் தேவைகள். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஐரோப்பா முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியைக் கண்டது. யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட பொருளாதாரத்தின் புனர்நிர்மாணமும் பன்முகப்பட்ட வளர்ச்சியும் மட்டுமன்றி புதிதாக தோன்றிய சமூக நல செயற்பாடுகளும்

---

## விடைதரல்

ஊமை வெயில் காயும்.
அறுகின் தளிர் கூட
அசையாத மதியம்.
உடல் தகிக்கும் கோடை
உயிர் தகிக்கும் துயரம்
ஆத்திரமும் வெளியில் வரா
அவலமும் குமையும்

நீ விடைபெற்றபோது
தருவதற்கு எதுவும் இல்லை
என்னிடம்
நெஞ்சு நிறைந்த நேசமும்
ஒரு முத்தமும்
இரு சொட்டுக் கண்ணீருமே.

எதிர்பாராப் பெருஞ்சூறையில்
வேர் அறுபட்ட
இளஞ் செடியாய்
அள்ளுண்டு எற்றப்பட்டாய்,
அந்தத் துயர் கொடிதே.

எனினும்,
துணிவும்
உயிர்வாழும் உன்மத்தமும் நிறைய
உதய காலச் சூரியனின்
உயிர்ப்புக் கொண்டாய்.

வெற்றியும் தோல்வியும்
நிச்சயம் அன்று;
ஆயினும்
மீண்டும் மீண்டும் முயல்தலும்
குன்றா ஓர்மமும்
வாழ்வின் சாரல்
ஆவது அறிவாய்.

இந்த முனைப்பின் வழியில்
இவ் விடைபெறும் பொழுதில்
நேசத்தையும்
முத்தத்தையும்
கண்ணீரையும்
எடுத்துச் செல்
சிறு நிழல் தரவே.

*

**சந்திரிகை**

13.05.87
யாழ்ப்பாணம்

www.tamilarangam.net

பலவிதமான மனித வளங்களைக் கேட்டன. இந்தக் காலகட்டம் பொறியியல், மருத்துவம், மற்றும் தொழில் நுட்பத் துறைகளின் பலமட்டங்களில் வளர்ச்சியைக் கண்டது. இது இலங்கையில் இருந்து வெளியேற முயற்சித்த தமிழர்களுக்கும் மிகவும் சாதகமானதாக இருந்தது. இதனால் அவர்கள் அதிக சிரமங்கள் இன்றி குடிபுக முடிந்தது. வயதில் இளையவர்களாக இருந்த பலர் புதிய துறைகளில் குறுகிய காலத்தில் பயிற்சி பெற்று வேலைகளைத் தேடக்கூடிய சந்தர்ப்பங்களும் இருந்தன.

இந்தக் காலகட்டத்தின் முக்கியமான இன்னொரு அம்சத்தையும் குறிப்பிடவேண்டும். மேற்கின் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இவர்கள் பெருமளவில் மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், இன்றைய பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்தே சென்றனர். இலங்கையில் இருந்து சாதாரண உடலுழைப்பாளர்களின் வெளியேற்றம் பெருமளவில் இடம்பெறவில்லை. 1950 - 70களில் வெளியேறிய தமிழர்களைப் பொதுவாக 'நடுத்தர வர்க்கத்தினர்' எனப் பரந்த கருத்தில் கூறலாம்.

இவர்கள் பொதுவாக தொழில்துறையிலும் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் முன்னேற்றம் அடைந்தனர். குடிபுகுந்த நாட்டின் நடுத்தர வர்க்கத்தினர் போன்று இவர்கள் அடிப்படை சமூக பொருளாதார ஸ்திரப்பாட்டினைக் கொண்டுள்ளனர். நிறவாதம் இவர்களையும் பாதிப்பது உண்மை. நிறவாதத்தால் இவர்களுடைய சமூகநகர்ச்சி பாதிக்கப் படலாம். ஆனால் அடிப்படையில் இவர்களுடைய பொருளாதார அந்தஸ்து ஸ்திரமானது. உடலுழைப்பாளர்களாக வாழும் சக கறுப்பர்களுக்கிருக்கும் சமூகப் பிரச்சனைகள் பொருளாதாரக் கஷ்டங்களை இவர்கள் அனுபவிப்பதில்லை. இவர்களில் பலர் தமது ஐரோப்பிய சகாக்களையும்விட தொழில் ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இவர்களின் குழந்தைகள் ஐரோப்பிய தமிழர் அல்லது தமிழ் ஐரோப்பியர். அதாவது சமூக கலாசார ரீதியில் அவர்கள் தமது பெற்றோரையும்விட முழுமையான ஐரோப்பியர்கள். இந்த இரண்டாம் சந்ததியினர் குடிபுகுந்த நாட்டின் மொழியைத் தமது தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இது இந்த இரண்டாம் சந்ததியின் அடிப்படை வேறுபாட்டையும் சமூகச் சிறப்பியல்பையும் காட்டுகிறது.

இரண்டாம் சந்ததியின் சமூக நகர்ச்சியின் அடித்தளமாக அவர்களின் பெற்றோர் அமைத்துக் கொடுத்த நடுத்தர வர்க்க அந்தஸ்து அமைகிறது. இதுவே இரண்டாம் சந்ததியின் ஆரம்ப நிலை. ஆனால் இவர்களின் வர்க்க நகர்ச்சியும் சமூக அந்தஸ்தும்



www.tamilarangam.net

காலத்துக்குக் காலம் எழுந்துவரும் நிறவாத அலைகளால் பாதிக்கப்படலாம். நாட்டின் பொருளாதார மந்தத்தின் விளைவுகள் இவர்களையும் பாதிக்கும். ஆனால் இவர்களின் ஆரம்பநிலை இவர்களுக்கு ஒரு உந்தலைக் கொடுக்கிறது. அவரவரின் தனிப்பட்ட தொழில் தகைமைகள் சமூகத் தொடர்புகளையொட்டி நிறவாதத்தின் தாக்கங்கள் வேறுபடும். உதாரணமாக உயர்வருமானம் பெற்றுத் தரும் தொழில் திறமைகளை கல்வித் தகைமைகளைக் கொண்டோர் இத்தகைய திறமைகள் இல்லாதோர் போல் பாதிக்கப்பட மாட்டார்கள். இந்த முதற்கட்ட குடிபுகலாளர்களில் ஒரு சிறுபான்மையினர் முதலாளித்துவ வர்க்கத்தின் அங்கத்தவர்களாகப் பரிணமித்துள்ளனர்.

ஆயினும் யாழ்ப்பாணத்து வம்சாவழியினரான தமிழரின் நடுத்தர வர்க்க சமூக அந்தஸ்துக்குத் தொடர்ந்தும் சில யாழ்ப்பாணத் தன்மைகள் இருப்பதைக் காணலாம். இதன் ஒரு சுவாரஸ்யமான ஆனால் முக்கியமான வெளிப்பாட்டை மேல்நாட்டில் உருவாகியுள்ள யாழ்ப்பாணத் தமிழரின் கல்யாணச் சந்தையில் காணலாம். மேல்நாட்டு யாழ்ப்பாணத் தமிழர் (எவ்வளவு புதினமான ஒரு சமூகப் பெயர்!) இப்போது Tamil Times எனும் ஆங்கில மாத சஞ்சிகையில் தங்களின் மணமக்கள் தேவைகளை விளம்பரம் செய்கின்றனர். இவ்விளம்பரங்கள் 'மேல்நாட்டு யாழ்ப்பாணத் தமிழரின்' சமூகப் பண்புகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவற்றில் யாழ்ப்பாணத் தமிழர் எனும் பதத்துடன் பிரிட்டிஷ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது அமெரிக்கப் பிரஜை எனும் பதமும் இணைந்திருப்பதையும் மணமகனின் அல்லது மணமகளின் கல்வி தொழில் போன்ற தகவல்களும் பல விளம்பரங்களில் சாதகம் பற்றிய தகவல்களும் இருப்பதைக் காணலாம். பதவியும் பிரஜாவுரிமையும் முக்கிய தகவல்கள். ஆனால் இவை யாழ்ப்பாணத் தமிழர் எனும் கட்டமைப்புக்குள் அமைகின்றன. இவ்வளவையும் பார்க்கும் இந்தப் புதியரக யாழ்ப்பாணத் தமிழர் சாதியும் பார்ப்பார்கள் எனச் சந்தேகிப்பதில் நியாயமுண்டு. சீதனம் புதிய வடிவங்களையும் பெறுகிறது.

(2) 1983க்குப் பின் புலம்பெயர்ந்த தமிழர்களின் வெளியேற்றத்தின் அடிப்படை உந்துசக்தி இலங்கையின் உள்நாட்டு யுத்தமும் தொடர்ச்சியான இனப்பாகுபாட்டால் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகளுமாகும். இந்தக் கட்டப் புலப்பெயர்வு முன்னையதைவிட சமூகரீதியில் சில வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருந்தது. நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் பெரும்பாலும் தமிழ் மூலம் கல்வி கற்ற இளைஞர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் அரசியல் தஞ்சம் கோரிகளாகவே ஐரோப்பா வந்துள்ளனர். ஒரு சிறுபான்மை பல கஷ்டங்களுக்கூடாக மாணவர்கள் எனும் போர்வையில் வந்துள்ளது. இவர்கள் எல்லோருமே பொதுவாக வேண்டாத விருந்தாளிகள். மேற்கு ஐரேப்பாவின் பல நாடுகளிலும் இவர்கள் பலவிதமான கட்டுப்பாடுகள் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோரிடம் தொழிற்சந்தையில் உடனடியாக விலைபோகக்கூடிய தொழில் திறமைகள் இல்லை. மறுபுறம் குடிபுகுந்த நாடுகளின் பொருளாதார மந்தமும் மீண்டும் எழுந்துவரும் நிறவாதமும்

www.tamilarangam.net



# 4000 ஆண்டுத் தமிழன்?



மனிதனின் பண்டைய வாழ்வு பற்றிய ஆய்வுக்கு அண்மையில் இன்னொரு முக்கிய தடயம் கிடைத்ததுடன் ஆய்வாளர்களுக்குப் புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் ஒஸ்திரியா நாட்டின் தென்மேற்கு மலைச்சாரலின் சிமுலுவன் எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித உடலின் உயிர்ச் சுவடே இந்தத் தடயமாகும். கடல் மட்டத்தில் இருந்து மூவாயிரம் அடி உயரத்தில் பனிப்படைகளின் ஆழத்தில் இந்த மனித உடல் புதையுண்டு கிடந்தது. இதனை ஜேர்மனிய உல்லாசப் பயணி ஒருவர் மலையேறும்போது தற்செயலாகக் கண்டுபிடித்தார்.

தடயமாகக் கிடைத்த இந்த மனிதனது வாழ்க்கைக் காலம் 4000 ஆண்டுகள் முந்தியது என - அதாவது வெண்கல காலத்து மனித உடல் என - ஆய்வுகள் கூறுகின்றன. 160சதம மீற்றர் உயரமான இவன் போதியளவு ஆயுதபாணியாக்கப் பட்டிருந்தான் என அறியப்படுகிறது. அம்பு, வில் போன்றவற்றோடு கத்தியும், வெண்கல குமிழ்க் கோடரியும், போதிய குளிர்ப் பாதுகாப்பு ஆடையும் கொண்டிருந்த இவனது கழுத்தில் கற்களால் ஆக்கப்பட்ட சங்கிலி காணப்பட்டது.

ஆய்வாளர்களுக்கு ஒருபுறம் புதிய தடயம் சந்தோசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்க, மறுபுறம் இருநாடுகள் இந்த மனிதன் தொடர்பாக உரிமைகோர ஆரம்பித்துள்ளன.

ஒஸ்திரியாவும், இத்தாலியுமே இவ்வாறு சண்டை போட ஆரம்பித்துள்ள நாடுகள். காரணம் இந்த மனிதன் கண்டெடுக்கப்பட்ட இடம் இரு நாடுகளினதும் எல்லையோரமாகவே உள்ளது. உண்மையில் இது யாருக்குச்

www.tamilarangam.net

சொந்தம் என்பது பற்றி அரசியல்வாதிகளும், விஞ்ஞானிகளும் ஒரு இணக்கத்துக்கு வரப் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது இந்த உடல் ஒஸ்திரிய நாட்டிடமே உள்ளது. இவ்வாறான தடயங்கள் இப்பிரதேசத்தில் மேலும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தப் பிரதேசம் தற்போது ஒஸ்திரியப் பொலிசாரின் பாதுகாப்பில் உள்ளது.

இந்தத் தடயம் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால் இது தொடர்பாக ஆக்கபூர்வமாக நடவடிக்கைகள் தேவை என சர்வதேச விஞ்ஞான ஆய்வாளர்கள் கேட்டுள்ளனர்.

அதிகம் நாகரீகம் அடையாத 4000 ஆண்டு பழமையான இறந்த மனிதனுக்கு, இருக்கும் மனிதர்கள் சண்டை பிடிப்பது வேடிக்கையானதுதான். இத்தனைக்கும் இன்று இந்த நாடுகள் தமது வேறுபாடுகளை மறந்து 'ஐரோப்பா' என்ற அடையாளத்தில் இணைய ஒருமுகம் கொண்டுள்ளன. இது பெரிதளவில் விளம்பரம் செய்யப்படும் இந்தக் காலகட்டத்தில் இப்படி ஒரு சண்டை.

உண்மையில் இந்த மனிதன் எந்த நாட்டைச் சேர்ந்தவன், எந்த இனத்தைச் சேர்ந்தவன், என்ன மொழி பேசினான் என்பது ஒருவருக்குமே தெரியாது. அவன் கிழக்கில் இருந்து வந்தானா, தெற்கில் இருந்து வந்தானா, வடக்கில் இருந்து வந்தானா என யாரறிவர்? உச்சந்தலைக்கு இனவாதம் ஏறிப்போன தமிழன்கூட தன்பங்கிற்கு 'இவன் தமிழன்' என்று சண்டை போட்டாலும் ஆச்சரியம் கொள்ள முடியாது.

●

உலகன்.

# வைத்திருத்தல்

சுகன்

ஓம்!
நம்பிக்கை வைத்திருக்கிறேன்!

தென்னை அடியில் தாட்டிருக்கும்
கரையொதுங்கி அள்ளிவந்த சாதாளையில்!

பூம்பாளையில்!

கன்னி வாழையின் அடிவயிற்றுப் பொதிக்குள்!

மொக்காகி குழிவிழுந்த
வேம்பினுள் கட்டிய பொந்துத்தேன்வதையின்
அடிப்புறத்தில்!

வடக்கனின் பிளவுண்ட
நாலு குளம்புகளின் ஈறு ஒன்றிற்குள்!

அவை
நம்பிக்கைகள்

அவை
வளரும்

மனிதர்கள் கண்களிலிருந்து மறையும்வரை!

●

1991ம் ஆண்டுக்கான நோர்வேயின் இலக்கியத்துக்கான Aschehaug பரிசு எழுத்தாளர் Kjell Askildenக்கு வழங்கப்பட்டுள்ளது.

● இலக்கியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* குளிர்காலம் நடையருக்கு மட்டுமல்ல, இங்குள்ள இலங்கைத் தமிழர்களில் பலபேருக்கு ஒவ்வாத விசயம் என்பது புதிதாகச் சொல்ல அவண்டிய விசயமல்ல. யாழ்ப்பாணத்தில் அல்லது இலங்கைத் தீவின் வெளியோரப் பகுதிகளில் பரந்து வாழ்நததால் இந்தக் குளிருக்கு இன்னும் தமிழர்கள் இசைவு பெறவில்லை என்றே தோன்றுகிறது. எனவே இந்த முறை சற்றே சூடான விசயத்துடன் ஆரம்பிக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஒஸ்லோவில் வாழும் பலரும் அண்மையில் ஒரு புதிய விளம்பரம் நகரில் மூலைமுடுக்கெல்லாம் காட்சி தருவதைப் பார்க்கலாம். ஒரே அழகியின் படங்கள் தாங்கிய இந்த விளம்பரங்களை இப்படி நகரில் பரப்பிவைத்துள்ள நிறுவனம் ஒரு புகழ்பெற்ற ஆடைகள் விற்பனை நிலையம். இந்த நிறுவனம் தற்போது விளம்பரம் செய்யும் ஆடைகள் எவையுமே

"இதே விளம்பரம், ஒரு இனிப்புப் பதார்த்தத்துக்காக இருந்தால் ஆபஎசமா இல்லையா?""" எங்கள் நாட்டில் இப்படி ஒரு விளம்பரம் பகிரங்க இடங்களில் 'காட்சி' தரும் நிலை இன்னும் உருவாகவில்லை என்றே நம்புகிறேன். தற்செயலாக அவ்வாறு பல விளம்பரங்கள் தொங்க அநர்ந்தால் பல வீதி விபத்துகள் அநர்ந்து சனத்தொகை குறையும் என்று எனது நண்பர் ஒருவர் அபிப்பிராயம் சொல்கிறார்.

* வீதி விபத்து என்றதும் அண்மையில் நிகழ்ந்த ஒரு கோரமான வீதி விபத்து நினைவு வருகிறது. இந்த விபத்தில் ஒரு தமிழ் இளைஞர் சிக்கி மரணம் அடைந்தார். கூடச்சென்ற சிலர் படுகாயமுற்றனர். இந்த விபத்துக்குக் குளிர்கால இருளும் ஒரு காரணம் என்று அறியப்படுகிறது. இவவறான மரணங்கள் தவிர்க்க முடியாதவை அல்ல. எமது உறவினர்களும் பெற்றோர்களும் நாம் இங்கு பாதுகாப்பாக இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருககிறார்கள். அவர்களுக்கு இனவாதம் எப்போது பூகம்பமாக வெடிக்கும் என்ற செய்தி தெரியாது. ஆனால் இவவாறான செய்திகள் அடிக்கடி தெரியவரும். இவ்வாறு செய்திகள் இலங்கைக்குப் போய்ச் அசர்வது அவ்வளவு நல்லதல்ல. ஒவ்வொரு

# நடையர் பார்வையில்

## நாட்டு நடப்புகள்

விபத்துகளில் மரணமாகியுள்ளனர்) இந்த விதமாக மரணம் எய்துவோரில் தமிழர்களின் வீதம் அவர்களது சனத்தொகை வீதத்தைவிட அதிகமாகவே இருக்றது.

வீதி விபத்துகள் தவிர்க்க முடியாதவை அல்ல, சிலவேளை விபத்து தவிர்க்க முடியாமல் நேர்ந்தாலும், அதனால் நேரக்கூடிய மரண அபாயத்தைத் தவிர்க்கலாம். எங்களது உயிருக்கு தவிர்க்க முடியாத அபாயம் என்று குறிப்பிடக்கூடிய அபாயம் நிறவாதம்தான்.

* ஊருக்குச் செல்லவேண்டும் என்றதும் அண்மையில் ஊர் செல்ல விரும்பிய ஒருவரின் பரிதாபம் நினைவு வந்தது. "என்ன ஐசே, ஊருக்குப் போக எவ்வளவு விருப்பமாக இருக்கு, ஆனால், ஊருக்குப் போய்வர எனக்குத் அதவையான காசைவிட அங்கை ஆராருக்கோ குடுக்க அவண்டிய காசுதான் பயங்கரம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குளிர்காலத்துக்கு உகந்தவை அல்ல. ஆனால் விளம்பரங்கள் சற்றே சூடானவை; குறைந்த பட்சம் இளைஞர்கள் மத்தியில். இந்த விளம்பரம் ஆபாசமானது என்று பல பெண்கள் குரல் எழுப்பியுள்ளனர். பல இடங்களில் இந்த விளம்பரச் சுவரொட்டிகளை யாரோ கிழித்தும் விட்டனர். இந்த விளம்பரங்கள் ஆபாசமானவை என்று கருதிய பொலிசார் ஒரு நகரின் மையத்தில் இருந்த விளம்பரங்களை எல்லாம் அகற்றிவிட்டனர். இந்தப் 'பிரச்சனை' ஒஸ்லோவுக்கு இன்னும் வரவில்லை. விளம்பரங்களைத் தயாரித்த நிறுவனம் இதற்காக பலலட்சம் குறோணர்களைச் செலவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. எனவே பொலிசார் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்தால் சட்ட உதவியை நாடினாலும் ஆச்சரியம் கொள்வதற்கில்லை. இவ்வாறு சர்ச்சையைக் கிளறிய இந்த விளம்பரம் பற்றி பொதுவாக ஒஸ்லோ வாசிகள் என்ன நினைக்கிறார்கள் என்று அண்மையில் பத்திரிகை ஒன்று தனது வாசகர்களைச் சந்தித்துக் கேட்டது. அதில் கேள்வி கேட்கப்பட்ட எல்லோருமே இது ஆபாசம் அல்ல என்றுதான் பதிலழித்தனர். அடுத்த நாள் ஒரு பத்திரிகையில் வந்த ஒரு கருத்து இன்னும் மனதில் நிற்கிறது.

உயிரற்ற உடலோ, அதன் சாம்பலோ இவ்வாறு இலங்கை செல்லும்போது அங்கு இருப்பவர்கள் அனைவரும் தமது உறவினர்களை நினைப்பது தவிர்க்க முடியாதது. இந்த நாட்டில்வீதிகளில் உயிர் குடிக்கும் பிசாசு இருப்பதாக அங்குள்ளவர்கள் கற்பனை செய்யக்கூடும். அது உண்மையல்ல, உண்மையில் உலகிலேயே வீதிப் போக்குவரத்தில் மிகக் கடுமையான சட்டதிட்டங்களையும் நடைமுறையையும் கொண்ட நாடு நோர்வே என்று அண்மைய ஆய்வு ஒன்று கூறுகிறது. இந்த நாட்டில் விபத்துகள் நிகழ்வது குறைவாகவும் இருக்கக்கூடும். (இந்த வருடம் இதுவரை 400க்கும் குறைவான பயணிகளே



கொழும்பிலை போய் நிண்டாலும் அங்கை ஜனநாயக வழிக்குத் திரும்பின பெடியள் கடத்தல், கப்பம் எண்டு நிக்கிறாங்கள். யாழ்ப்பாணம் ... பாறதை ... யாசிக்க ... வண்டாம். அந்தவரி, இந்த வரி, வந்த வரி திரும்பி வாற வரி எண்டு கட்ட ஒருபிள்ளை சீதணம் ... வணும். அதைவிட இந்தக் குளிருக்கை கனவு கண்டுகொண்டு இருக்கலாம். தமிழர்கள் ஒரு காலத்திலை இருந்த ஆட்சியைத் திரும்பவும் நடத்த நினைக்கிறது சரிவருகுதோ இல்லையோ, வரி வசூலிக்கறதிலை மட்டும் தமிழ் மூவேந்தர்களின்ரை பொற்காலம் திரும்பியிருக்கு. அது தமிழங்களின் பாரம்பரியப் பிரதேசத்திலை மட்டுமில்லாமல் சிங்களவற்றை பாரம்பரிய் பிரதேசத்திலையும் தமிழரைக் கலைகிறதுதான் வேடிக்கை"

இதுபற்றி நான் எந்தக் கருத்தும் சொல்லத் தேவையில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை இனப்பிரச்சனையில் ஒரு சிங்கள இதழ்

## ஓர் அறிமுகம்

தமிழர்கள் மத்தியில் பல பிழையான கருத்துகள் மிக இலகுவாக ஊட்டப்படுவது வழமையானது. முக்கியமாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களைப் பற்றிச் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் அவிழ்க்கும் கட்டுக்கதைகளுக்குச் சற்றும் குறைவில்லாமல், சிங்களவர்களைப் பற்றிப் பல கட்டுக்கதைகள் பரப்பப்படுகின்றன. உதாரணமாக சிங்களவர்கள் சிங்கத்துக்குப் பிறந்தவர்கள் என்று கூறப்படுவது போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். இவ்வாறான கதைகள் எதுவித விஞ்ஞான ஆதாரமும் இல்லாமல், சிங்கள மக்களைத் தமிழர்கள் மதிக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காகப் பரப்பப்படுபவை. இவற்றைப் பரப்புபவர்கள் பச்சை இனவாதிகளேயன்றி வேறல்லர். தமிழ் மக்களைப் போலவே சிங்கள மக்களும் அரசினால் ஒடுக்கப்படுபவர்கள் என்ற உண்மையையும் அந்த ஒடுக்குமுறையில் இருந்து அவர்கள் தம்மை விடுவிக்க நிகழ்த்தும் போராட்டத்தில் நாமும் உறுதுணையாக இருப்பதன் மூலம் எமது விடுதலையை இலகுவாக்கலாம் என்பதையும் காலம் காலமாக எமது தமிழ்த் தலைவர்கள் உணர்வதில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் கூறுவது போல சிங்கள மக்கள் அனைவரும் தமிழின விரோதிகளாக இருந்திருந்தால் 83கலவரத்தில் எந்தத் தமிழ்மகனும் சிங்களப் பகுதிகளில் இருந்து உயிருடன் திரும்பியிருக்க மாட்டான். சிங்கள மக்கள் மத்தியில் எமது போராட்டத்துக்கு ஆதரவான கருத்துகளை ஏற்படுத்த எமது அரசியல்வாதிகள் பெரிதும் தவறிவிட்டதுடன், அவ்வாறு புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சிப்போரையும் அந்நியப்படுத்தி 'துரோகி' என முத்திரை குத்திவிட்டனர். இந்த நிலையிலும் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவோ, அல்லது தமிழர்களின் போராட்டம் பற்றிய வெவ்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட ஒரு தளமாகவோ சிங்கள மொழியில் பத்திரிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 'ராவய' குறிப்பிடத் தக்கது. இவ்வாறான ஒரு பத்திரிகை பற்றி அனேக தமிழர்களுக்கு எதுவுமே தெரியாமல் இருப்பது, தமிழர்கள் சிங்கள மக்கள் பற்றி எவ்வளவு தூரம் அறிந்துள்ளனர் என்பதற்குத் தெளிவான சாட்சி. 'ராவய' இதழில் இடம்பெற்ற பல ஆசிரியத் தலையங்கங்களையும் கவிதைகளையும் தொகுத்து 'இலங்கை இனப்பிரச்சனையில் ஒரு சிங்கள இதழ்' என்ற நூலாக தமிழக 'அன்னம்', வெளியீடு ஒன்றைச் செய்துள்ளது. நூலாசிரியர் மோகனசுந்தர பாண்டியன்.

---

'சரிநிகர்'

இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) மாதாந்த தமிழ்ப் பத்திரிகை. இலங்கையில் சகல இன மக்களிடையேயும் புரிந்துணர்வை வளர்த்தெடுக்கவும், அரசியற் சக்திகளது போலிமுகங்களை மக்கள்முன் அம்பலப்படுத்தவும் துணிச்சலுடனும் நடுநிலையுடனும் கருத்துகளை முன்வைக்கும் பத்திரிகை.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்.பத்மநாதனின் 'மனக்கோலங்கள்'

## நாடகம்

காட்சி1

*படித்த இளைஞர், இவருக்கு ஆதரவாக இரு பொதுமக்கள், ஓர் இளைஞன், சமூக அறிஞர், இவரது நண்பன், இவர்கள் மேடையில் அனைத்துப் பகுதிகளையும் நிரப்பியவண்ணம் அசையாது நிற்கின்றனர். மேடையில் ஒளி பரவியுள்ளது*

ஒரு குரல்: (மேடையின் பின்பக்கம் இருந்து)
எமது போராட்டத்துக்கு நாங்கள் ஒடுக்கப்பட்ட மக்களை இணைக்கிறோம். மலையக மக்களை இணைத்துக் கொள்கிறோம். வெளி மாவட்டத்தினரை இணைக்கிறோம்.

*படித்தஅறிஞர் எதையும் கவனியாததுபோல மேடையில் அங்கும் இங்குமாக நடந்து திரிகிறார்*

சமூக அறிஞர்: (மேடையை நோக்கி) நீங்கள் யார்? நீங்கள் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் இல்லை, மலையக மக்கள் இல்லை, முஸ்லீம் மக்கள் இல்லை. வெளிமாவட்டம் இல்லை அப்போ நீங்கள் யார்?
ஓர் குரல் (மீண்டும்): எமது போராட்டத்துக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதும் தரப்படுத்தல் ஒரு முக்கிய காரணமாகும். ஆகவே தரப்படுத்தலை நீக்கப் போராடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக அறிஞர்: தரப்படுத்தல் என்ற சட்டம் வந்தபின்தான் மட்டக்களப்பு, அம்பாறை, மூதூர், திருமலை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, புத்தளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர் ஆகவே தரப்படுத்தலை நீக்கு என்ற கோஷம் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தினர்க்கு எதிரான கோஷமாகும்.

சமூக அறிஞரின் நண்பர்: இங்கு அரசியல் வேண்டாம்!

*அனைவரும் மேடையில் இருக்க குழந்தைகள் மேடையைச் சுற்றி ஆடிவருகின்றனர். நடனம் ஆரம்பிக்கும்போது நிற்கும் ஏனையோர் ஆரம்பத்தில் நின்றுவிட்டு நடனம் தொடங்க நிலத்தில் அமர்கின்றனர்.*

பாடல்:

குழந்தைகள் ஆனவர்ஜவர் மக்களை நோக்கி
குறைகளைப் போக்க எண்ணி இங்கு வந்தார்
அறிஞர்கள் இவர்களை மக்கள் இனம்காண
அறியாமை போக்க எண்ணி இங்கு வந்தனர்

*பாடலின் முடிவில் ஒரு குழந்தை திடீரென மயங்கி விழுகிறது, சமூக அறிஞர் பதற்றத்துடன் எழுந்து செல்கிறார். மேடையில் திடீரெனச் சற்றுப் பலத்த ஒலி... மற்றவர்கள் எழுந்து குழந்தை இருக்கும் இடம் நோக்கி வருகின்றனர். படித்த அறிஞர் எழுந்து, வாசித்தவண்ணம் நிற்கிறார்.*

குழந்தை: கடவுள்
பொதுமகன்1: குழந்தை கடவுள் என்கிறது.

குழந்தை: விடு...
பொதுமகன்2: குழந்தை விடுதலை என்கிறது
பொதுமகன்1: ஆமாம்! இது தெய்வக் குழந்தை!!

சமூக அறிஞர்: குழந்தைக்கு மூளையில் தாக்கம் ஏற்பட்டுவிட்டது
பொதுமக்கள்: இல்லை இல்லை இது தெய்வக் குழந்தை!

படித்த அறிஞர்: இந்தியாவில் ஒரு சிறிய குழந்தை எதிர்காலத்தைப் பற்றிய உண்மைகளைக் கூறுவதாகப் படித்தேன். அமெரிக்காவிலும் அப்படியொரு சம்பவம் நடந்ததாக ஒரு புத்தகத்தில் படித்தேன். இது ஞானக்குழந்தைதான்.

பொதுமகன்1: அமெரிக்காவில் நடந்ததாம் அப்ப அது உண்மைதான்

பொதுமகன்2: திருஞானசம்பந்தரும் மூன்று வயதிலை தேவாரம் பாடினவர்தானே!

இளைஞன்: ஆமாம், இது தெய்வக் குழந்தையேதான், இந்த மகிழ்ச்சியை நாங்கள் கொண்டாடுவோம்.

பாடல்:

தெய்வம் பிறந்தது ஞானம் பிறந்தது அரகரோகரா
ஞானம் பிறந்தது ஞாயிறு உதித்தது அரகரோகரா
ஏழ்மைகள் நீங்கும் கல்விகள் ஓங்கும் அரகரோகரா
வாழ்க்கை ஓங்கும் வழிகள் பிறக்கும் அரகரோகரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்சி 2

சமூக அறிஞர்: சும்மா ஆடல்பாடல்களை விட்டிட்டு உங்கடை பிரச்சனைகளைத் தீர்க்க வழியைப் பாருங்கோ

அந்தக் குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கோ

அந்தக் குழந்தையின் மனநோயைப் பற்றி மனநோய் மருத்துவரைக் கலந்தாலோசியுங்கோ

பொதுமகன்1: நாங்கள் இந்த அறிஞரிடமும், அந்தத் தெய்வக் குழந்தையிடமும்தான் எங்கள் பிரச்சனைகளைப் பற்றி ஆராய்வோம்.

பொதுமகன்2: நாங்கள் எங்கள் பிரச்சனைகளை இந்தக் குழந்தையிடம் கேட்போம்

*எல்லோரும் குழந்தையைச் சூழ்கின்றனர்*

குழந்தை: வெளி....

பொதுமகன்1: குழந்தை வெளி... என்று கூறுகிறது, அதன் விளக்கம் தெரியவில்லையே

பொதுமகன்2: அறிஞரிடம் கேட்போம்

*படித்த அறிஞரிடம் இருவரும் சென்று மிக்க பணிவுடன் இதுபற்றிக் கேட்கிறனர்.*

படித்த அறிஞர்: வெளி என்று தொடங்கினால் வெளிநாடு என்று பொருள்படும். இப்போது பல நாடுகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து பணம் சம்பாதிக்கின்றனர், உங்கள் பிரச்சனை தீர நீங்கள் வெளிநாடு செல்லலாம்.

பொதுமகன்1: நான் நோர்வேக்குப் போறன்

பொதுமகன்2: நான் அமெரிக்காவுக்குப் போறன்

இளைஞன்: நான் கனடாவுக்குப் போறன்.

பாடல்:

நோர்வேயில் வாழப்போகும் சின்னமாமா
நொஸ்க்கு நல்லாப் படிக்கவேணும் சின்னமாமா
கனடாக்குப் போகப்போகும் கனகுமாமா
களவொன்றும் செய்யக்கூடாது நல்லமாமா
அமெரிக்கா போகப்போகும் ஆசைமாமா
அமைதியாக வாழவேணும் ஆசைமாமா
இங்கிலாந்து போகப்போகும் எங்கள் மாமா
இங்கிலீசு படிக்கவேணும் எங்கள் மாமா
வெளிநாடு போகப்போகும் எங்கள் மாமா
எமது நாட்டை மறக்கவேண்டாம் எங்கள் மாமா

காசுபணம் சேர்க்கவேண்டும் எங்கள் மாமா
கலைகள் பல செய்யவேண்டும் எங்கள் மாமா
வெளிநாடு போகப்போகும் எங்கள் மாமா
தாய்நாட்டை மறக்கவேண்டாம் எங்கள் மாமா

www.tamilarangam.net

சமூக அறிஞர்: எல்லோரும் போனால் நமது நாட்டை யார் பார்க்கிறது? நான் எங்கடை நாட்டிலை எங்கடை மக்களோடை வாழப்போறன்

பொதுமகன்3: நானும் எமது மக்களுடன் வாழ்ந்து எமது பிரச்சனையைத் தீர்க்கப் போராடப் போகிறேன்

காட்சி 3:

பொதுமகன்1: இங்கை பாருங்கோ எங்கட தெய்வம் ஏதோ சொல்லுது

பொதுமகன்2: கிடைக்கும் எண்டு சொல்லுது

பொதுமகன்1: கிடைக்குமாம் கிடைக்குமாம்

பாடல்:

கிடைக்குமாம் கிடைக்கும் எமக்குக் கிடைக்கும்
கிழவிகள் எல்லாம் குமரிகள் ஆகிட
குடிசைகள் எல்லாம் மாடிகள் ஆகிட
மண்கட்டி எல்லாம் பொன்கட்டி ஆகிடக்
கிடைக்கும் கிடைக்கும் எல்லாம் கிடைக்கும்

பொதுமகன்1: என்னாலை ஏலாது, (சலித்துச் சோர்ந்தபடி) என்னாலை ஏலாது

பொதுமகன்2: எனக்கும் களைக்குது நல்லாக் களைக்குது

சமூக அறிஞர்: என்ன உங்களுக்குக் கிடைக்கும்?

பொதுமகன்1: அது தெரியாது, அதுதான் விளங்கேல்லை

பொதுமகன்2: எனக்கும் ஒன்றும் விளங்கேல்லை

பொதுமகன்3: ஒன்றுமே விளங்காமல் ஏன் ஆடுகினம் என்று எனக்கு ஒன்றும் விளங்கேல்லை.

காட்சி4

பொதுமகன்1: (மிகவும் உணர்ச்சியுடன்) செய்திவாற நேரமாச்சு கொஞ்சம் அமைதியாக இருங்கோ

செய்தி: (தலை சுற்றியவாறு சிறிய ஆட்டத்துடன் வந்து நடுவில் நின்று) இது எங்கள் செய்தி. அவர்கள் செய்வது எல்லாம் தவறு. நாங்கள் செய்வதெல்லாம் சரி. நாங்கள் சரியானவற்றையே செய்கின்றோம். அவர்கள் பிழையானவற்றையே செய்கிறார்கள், அவர்களில் பலர் இறந்தார்கள். அவர்களில் பலர் காயமடைந்தார்கள். இது எங்கள் செய்தி.

சமூக அறிஞர்: செய்தியெல்லாம் தலைச்சுத்தும் இருட்டடிப்புமாகத்தான் இருக்குது.

பொதுமகன்1: எத்தினை பேராம் செத்தது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுமகன்2: அங்க குழந்தை கையைக் காட்டுது

பொதுமகன்1: ஐந்து பேராம்

பொதுமகன்2: இல்லை ஐம்பது பேராம்

இளைஞன்: இல்லை அவர்களில் ஐநூறு பேர் செத்திட்டினம், இது மகிழ்ச்சியான நாள்.

படித்த அறிஞர்: அன்று வியட்னாமில் 500 பேர் செத்தார்கள், இதுவும் உண்மையாக இருக்கலாம்.

சமூக அறிஞர்: பிள்ளைக்கு வருத்தம் கடுமையாகிவிட்டது, பிள்ளையைக் காப்பாற்றுவோம்.

*சமூக அறிஞரும் நண்பரும் குழந்தையைத் தூக்கிச் செல்கின்றனர், சிறிது நேரத்தின் பின்னர் இருவரும் வருகின்றனர்.*

சமூக அறிஞர்: அந்தப் பிள்ளை இறந்துவிட்டது.

இளைஞன்: அந்தப் பிள்ளை இறந்தாலும் அவர்களில் 500பேர் செத்த செய்தியைச் சொல்லிப் போட்டுத்தான் செத்திருக்கிறது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவோம்.

சமூக அறிஞர்: அவர்கட்கோ அங்கு திண்டாட்டம், இந்தத் தரம்கெட்ட மாந்தர்க்கோ மரணம் கொண்டாட்டம்

பாடல்:

எலுமிச்சம்பழத்துக்குப் புளிப்பு கொண்டாட்டம் - இந்தத்
தரம் கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
அவர்கட்கு அங்கு திண்டாட்டம் - இந்தத்
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
மனிதர்கள் உணவின்றி அங்கு திண்டாட்டம் - இந்தத்
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
மனிதர்கள் வீடின்றி ஆங்காங்கே ஓட்டம் - இந்த
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்

காட்சி 5

சமூக அறிஞர்: அமைதி, அமைதி! இது உங்களுக்கு மகிழ்ச்சியான நாளா? ஏன் நீங்கள் முட்டாள்களாக நடந்துகொள்கிறீர்கள்

இளைஞன்: இவர் எங்கள் சந்தோசத்தைக் கெடுத்ததும் அல்லாமல், பெரும்பான்மையை எதிர்த்ததுடன் எங்கள் அறிஞர் உட்பட அனைவரையும் முட்டாள் என்றுவிட்டார். எனவே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக இவருக்கு நாங்கள் மரணதண்டனை வழங்குகிறோம்.

பொதுமகன்3: (சற்றுத் தயங்கி) கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய எமது மூத்தகுடி மக்களே! நாங்கள் எதிரிக்கும் மதிப்பளித்தே வந்துள்ளோம். இந்த இறந்த அறிஞர் உங்கள் எதிரியேயாயினும் எனது நண்பன் என்ற முறையில் அவரைப்பற்றிச் சிறிது உரையாற்றுவதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகிறேன்.

www.tamilarangam.net

இளைஞன்: ஒழுங்கான முறையில் பேச அனுமதி வழங்குகிறேன்.

பொதுமகன்3: இந்தச் சமூக அறிஞருக்கு இந்த இளைஞன் வழங்கிய தண்டனை நியாயமானதுதான். ஆனாலும் இந்த அறிஞரைப் பற்றி நீங்கள் முழுவதும் அறிந்திருக்கவில்லை. இங்கு இருக்கும் அறிஞரைப்போல இறந்த அறிஞருக்குப் பொறியியல் அறிவு இல்லைத்தான். உலகளாவிய சஞ்சிகைகள் பற்றிய அறிவு இந்த அறிஞரைப் போல இல்லை. இந்த அறிஞரோ இத்துறைகளில் சிறந்தே விளங்கினார். ஆனால் இவருக்கு நேரப் பற்றாக்குறையால் மருத்துவத்தைப் பற்றிப் படிக்கவில்லை. ஆனால் இறந்த அறிஞருக்கோ ஓரளவு மருத்துவத்தைப் பற்றித் தெரியும். மக்களைப் பற்றியும் ஓரளவு அறிந்திருந்தார். ஆகையால் இங்கு இறந்த குழந்தையின் தலையில் ஏற்பட்ட காயத்தின் தாக்கம் காரணமாகத்தான் அது வித்தியாசமான முறையில் கதைத்தது என்பதையும் குழந்தைக்கு ஏற்பட்ட வருத்தத்தையும் அறிந்து அதன் ஆதாரங்களைச் சேர்த்திருந்தார். ஆனால் துரதிர்ஷ்டமான முறையில் குழந்தையின் நோய் கடுமையாகிக் குழந்தை இறந்துவிட்டது. குழந்தைமீது கொண்ட பாசம் காரணமாகவே அவர் உங்களை எதிர்த்தார். ஆனால் அவர் உங்களை எதிர்த்தமைக்காக நீங்கள் வழங்கிய தண்டனை நியாயமானதுதான்.

படித்த அறிஞர்: என்னை மன்னித்து விடுங்கள், எனக்கு இருந்த நேரக்குறைவாலும் நான் எனது படிப்பில் செலுத்திய தீவிரக் கவனம் காரணமாகவும் சமுதாயத்தைப் பார்க்கவில்லை. மனநோய்களைப் பற்றி அறியவில்லை. நானும் பெரும்பான்மையுடன் இருந்தால், எனது கல்விக்கும் தொழிலுக்கும் பிரச்சனை இருக்காது என்பதற்காக, பெரும்பான்மையுடன் இணைந்து, இந்த உயிர்கள் வீணாகப் பலியாகக் காரணமாகிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள், என்னை மன்னித்துவிடுங்கள்...

பொதுமகன்3: (தொடர்ந்து) இந்த இளைஞன் பாராட்டப்பட வேண்டியவன். இந்தச் சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பற்றிய சரியான முடிவு எடுக்காதபோதே இந்த இளைஞன் முடிவுகளை எடுத்தான். அந்த வகையில் இந்த இளைஞன் பாராட்டப்பட வேண்டியவன். அந்த வகையில் இந்த இளைஞன் வழங்கிய மரணதண்டனை நியாயமானதுதான். ஆனால் இந்த இளைஞன் ஜனநாயகத்தைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்டான். ஜனநாயகம் என்பது அனைவரும் பிரச்சனையைத் தெளிவாகப் புரிந்துகொண்டு முடிவு எடுப்பதில் தங்கியுள்ளது. ஜனநாயகம் என்பது சிறுபான்மையினரின் உணர்வுகளையும், அபிப்பிராயங்களையும் மதிப்பதுமாகும். அவர்களது சுதந்திரத்தினையும் ஏற்றுக் கொள்வதுமாகும். ஆனால் இந்த இளைஞன் இவற்றைப் புரிந்துகொள்ளப் போதிய அனுபவம் இருக்கவில்லை. சிறந்த ஆலோசனைகள் கிடைக்கவில்லை, எனவே நாம் அந்த இளைஞனை மன்னிப்போம்.

இளைஞன்: என்னை மன்னித்துவிடுங்கள்..... என்னை மன்னித்துவிடுங்கள்.

*பொதுமகன்3 பேசிக்கொண்டிருக்கும்போதே இளைஞன் பக்கமாக இருந்த மக்கள் படிப்படியாக இடம்பெயர்ந்து இவரது திசையில் வருகிறார்கள். பேச்சு முடிவில் அனைவரும் அவரது பக்கம் வந்துவிடுகிறார்கள். பின்னால் மன்னிப்பு வேண்டியபடி இளைஞனும் இணைகிறான்.*

*(மன்னிக்கவும்! யாவும் கற்பனையே!!)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாண வியாபாரிகள் சமூக விரோதிகளா?

வடபகுதியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்கான காரணம் என்ன என்று வடக்கில் இருந்து வந்தவர்களைக் கேட்டபோது "எல்லாம் சமாதானம் வந்துவிடும் என்ற நம்பிக்கையின் விளைவுதான்" என்றார்.

புலிகளுக்கும், அமைச்சர் தொண்டமானுக்கும் இடையில் சமாதான முயற்சி ஒன்று நிகழ்வதாக யாழ் பத்திரிகைகள் தலைப்புச் செய்தி வெளியிட்டதாகவும், இவ்வாறான செய்தியால் தம்மிடமிருந்த பொருட்களின் விலை சரியும் என்ற அச்சத்தில் அவற்றைப் பகிரங்கமாகச் சந்தைக்கு அனுப்பியதாலேயே விலைகள் பெருமளவில் சரிவதாக வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி வெறும் செய்தி மட்டும் அல்ல, இதில் உள்ளடங்கிய அம்சம் மிகப் பாரதூரமானது.

யாழ்ப்பாணப் பகுதிக்கு அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடை மாத்திரம் அங்கு நிலவும் விலை உயர்வுக்குக் காரணம் என்று கூற முடியாது. எல்லாத் தேசங்களிலும் எப்போதும் உள்ள பதுக்கல்காரர்களும் கொள்ளை லாபம் அடிக்கும் இந்த வியாபாரிகளும் விலையேற்றத்துக்கு முக்கிய காரணம் ஆவர்.

மேலே உள்ள செய்தி வடக்கில் - தாராளமாக யாழ்ப்பாணத்தில் - 'சமூகவிரோதிகள்' (பதுக்கல், கொள்ளை லாப வியாபாரிகள்) உள்ளதையே காட்டுகிறது.

அப்படியானால் வயிற்றுப் பிழைப்புக்காக வாழைக்குலை எடுத்தவனுக்கே மரணதண்டனை வழங்கிப் புனிதர்களாகிப்போன விடுதலை இயக்கங்கள் என்ன செய்கின்றன? கண்டும் காணாதது போல நடந்துகொள்கின்றனவா? இந்த வியாபாரிகள் 'கள்வர்கள்' போலத் தலைமறைவு வாழ்க்கை வாழவில்லை. வெளிப்படையாகவே வியாபாரம் செய்கிறார்கள். நிச்சயமாக இயக்கத்துக்குத் தெரிந்த இவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. ஏன்? (காரணம் இருக்கும்போலத் தெரியவில்லையா?)

சரி, தண்டனை வழங்கப்படாவிடினும் 'வேறு நடவடிக்கைகள்' ஏன் எடுக்கப்படவில்லை?

'கொழும்பு அரசியல் அவதானி' ஒருவரது கருத்துப்படி இந்த வியாபாரிகள் 'வரி' (கப்பம்) கட்டித் தப்பிவிடுவதாகத் தெரிகிறது. அப்படிச் சொல்லப்படுவது உண்மையானால் சிறிது பணம் வருகிறது என்பதற்காக மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தலாமா? போராட்டம் யாருக்காக? பணம் மக்களுக்காகவா? பண்ணுபவர்களுக்காகவா?

● சி.குமாரவேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SUVADUGAL**

**A Tamil Monthly From Norway**

**October November**
**1991**



Foto: Anne Skatvedt

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்